விலை: 30.00
பக்கங்கள் :இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 10 செவ்வாய்க்கிழமை (25.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138

## 19ஆம் திருத்தத்தை நீக்க ஆதரவளிக்க மாட்டோம்

### வாசுதேவ நாணயக்கார



(கொழும்பு)

19ஆம் திருத்தத்தை இல்லா மலாக்க ஆதரவளிக்கமாட்டோம். நிறைவேற்று ஜனாதிபதி முறை மையில் இருந்து பாராளுமன்றத் துக்கு அதிகாரங்கள் இதன்

23

## 19ஆவது திருத்தத்தின் விளைவுகளை காலம் கடந்து ஜனாதிபதி உணர்ந்துள்ளார்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் விளைவுகளினால் அத் திருத்தத்தை இரத்து செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி காலம் கடந்து உணர்ந்துள்ளார் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தற்போது உணர்வதால் எவ்வித பயனும் ஏற்படாது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இவ் வருடத்தில் தேர்தலுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

23

## பாராளுமன்ற தெரிவுக்குழுவில்

### ரிஷாத் நாளை சாட்சி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் தெரிவுக்குழு முன்னிலையில் நாளை 26 ஆம் திகதி முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான

24

### பயங்கரவாத தாக்குதல்களால்

# இலங்கையில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது

## மனித உரிமைகள் ஆணையாளர் கவலை

(ஜெனிவா)

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த பயங்கரவாத தாக்குதல்கள் இலங்கையில் பதற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிஷேல் பெச்சலெட் கவலை வெளியிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



### ஹேமசிறிக்கு எதிராக

## விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவு



24

### யுத்த காலத்தில் கூட

## சுதந்திரமாக மக்கள் இருந்தனர்

### மகிந்த கவலை

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கூட சுதந்திரமாக இருந்த மக்கள், இன்று அரசாங்கத்தின்

23

## 18ஆவது திருத்தம் சர்வாதிகாரம் என்பதனை ஏற்க முடியாது

### உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

19 ஆவது திருத்தச்சட்டம் பல வீனமானது என்பதை ஏற்றுக் கொண்டாலும், 18 ஆவது திருத்தச் சட்டத்தை சர்வாதிகார சட்டம் என ஜனாதிபதி கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேலும், மக்களின் எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையிலேயே 18 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டதாகவும்

23

### ஐ.தே.க. அரசின் செயற்பாட்டை

## நூறு நாட்களுக்குள் முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

### டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

நூறு நாட்களுக்குள் ஐ.தே.க. அரசின் செயற்பாட்டை முடிவுக்கு கொண்டுவருவோம் என எதிர்க்கட்சி பராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். ஊடகங்களுக்கு நேற்று திங்கட்கிழமை கருத்து தெரிவித்த

23

### இஸ்லாமியத்தை துடைத்தெறிய

## தமிழ், சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும்

### அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டுமாயின் தமிழ், சிங்கள மக்கள் அரசியல் வேறுப்பாடுகளை துறந்து ஒன்றுபட வேண்

23

## முல்லையில் 6 மாதத்திற்குள் 10 ஆயிரம் பேருக்கு காணி உறுதி

### ஆளுநர் சுரேன் ராகவன் உத்தரவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் அடுத்த 6 மாதத்திற்குள் 10 ஆயிரம் பேருக்கு காணி உறுதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் கலா



23

## இன்று ஆச்சரியம் காத்திருக்கின்றது என்கின்றார் ரணில்

(கொழும்பு)

நாளை விடியும் போது அனைவருக்கும் ஆச்சரியமூட்டும் செய்தி காத்திருக்கின்றது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

23



SINGER Plus நிறுவனத்திடம் இருந்து மட்டுமே
மற்றும்
SISIL WORLD
அனைத்து விதமான இலத்திரனியல் பொருட்கள் மற்றும் தளபாடங்கள்
பெற்று மாதாந்த தவணை அடிப்படையில் சிறிது சிறிதாகச் செலுத்துங்கள்
வட்டியின்றி
இன்று முதல் ஜூன் 30 வரை மட்டுமே
(C-6771)

# மரண அறிவித்தல்



## இராசதுரை செல்வராசா (பேபி)

பிறப்பு 10.03.1949 | இறப்பு 22.06.2019

இணுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை செல்வராசா கடந்த *(22.06.2019)* சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - அன்னரத்தினம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் மகாலக்ஷிமியின் அன்புக் கணவரும் கோபிநாத் (ஜேர்மனி), சியாமளன் (சிங்கப்பூர்), சுரேசனா (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாதுமை, பிரியகாஷன் (டுபாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜயரத்தினம், காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் யோகேஸ்வரன், ஜெயமலர், இந்திராதேவி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீசண்முகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சத்தியதேவி மற்றும் கலாமதி, ரஞ்சனேஸ்வரி, கணேசு, சிவராசலிங்கம், ரதிகலா, ஜெகதீஸ்வரி, விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கமலாம்பிகை, இந்துமதி, காந்திமதி, செந்தில்மதி, செந்தில்செல்வி ஆகியோரின் மைத்துனரும் சின்னராசா, பாலசுப்பிரமணியம் கணேஸ்வரன், சிவகுருநாதன், ஸ்ரீதரன், அகிலாண்டேஸ்வரி, வசந்தினி ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(25.06.2019)* செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(9372)

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:- குடும்பத்தினர்
0212243017, 0778608004,
0776366531

# கப்பம் கொடுக்க மறுத்த வர்த்தகர் குத்திக் கொலை

## தெஹிவளையில் கொடூரம்

கப்பம் கொடுக்க மறுத்த வர்த்தகர் ஒருவர் தெஹிவளையில் நேற்றுப் பகல் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். தனது வர்த்தக நிலையத்திற்குள் வைத்து அவர் கொல்லப்பட்டுள்ளார்.

வைத்திய வீதிக்கு அருகில் காலி வீதியில் உள்ள ஜெயலங்கா காட்வெயார் உரிமையாளர் அப்துல் அசீஸ் (60) என்பவரே கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில்அங்கு சென்ற ஒருவர் கத்தியால் குத்தி விட்டு தப்பியோடியுள்ளார்.

வர்த்தகர் உதவிக்குரல் எழுப்பியதையடுத்து, அருகிலிருந்த வர்த்தகர்கள் அங்கு சென்ற போது அவர் இரத்த வெள்ளத்தில் துடித்தபடியிருந்தார். உடனடியாக களுபோவில வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழந்து விட்டார். (ம-3)


## ஏல விற்பனை


ஜி.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ 89A பெரிய கடை வீதி மன்னார் நிறுவனத்தில் 30.06.2017ற்கு முன்பாக வைக்கப்பட்ட அடைவு நகைகள் யாவற்றையும் 27.07.2019க்கு முன்பாக மீட்கவும் அல்லது மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்க தவறின் 28.07.2019இல் ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(9370) ஜி.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ, மன்னார்.




யாழ்.மாவை கலட்டி பாற்சாலை ஞாயிறு காலை 9.00 மணியளவில் சங்கானை பல.நோ. கூட்டுறவுச் சங்கம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. முகாமையாளர் **வை.உதயராசா** தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் **ந.நடனேந்திரனும்** முன்னாள் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தருமான **ந.திரிலோகநாதனும்** மேற்படி பாற்சாலையை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்கள். (C-6770)



# விழி நீர் சொரிகின்றோம்

அமரர்

## சத்தியசீலன் லதர்சன்

(கணக்குப் பதிவாளர் - யாழ்.பல்கலைக்கழகம்)

எமது ஆருயிர் நண்பனின் திடீர் மறைவுச் செய்தி எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் மல்கிய ஆறுதலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகனின் பாதக்கமலங்களைச் சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

இளைஞர்கள்
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில்.

# 19ஆவது திருத்தத்தின் மூல வரைபில் மாற்றங்களை ஏற்படுத்தியது யார்?

## ஜனாதிபதியை நோக்கி ஜயம்பதி கேள்வி

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூல வரைபினை எவ்வித மாற்றங்களுமின்றி முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால் எவ்வித அரசியல் நெருக்கடிகளும் அரசியலமைப்பை மையப்படுத்தி ஏற்பட்டிருக்காது. ஆகவே இத்திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது குறிப்பிடும் கருத்துக்கள் பொருத்தமற்றவை என பாராளுமன்ற உறுப்பினரும் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்தார்.**



நாடுமுன்னேற்றமடையவேண்டுமாயின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் என்ற தேவை கிடையாது. மாறாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை கொடுத்த வாக்குறுதிக்கு அமைய ஜனாதிபதி இரத்து செய்ய வேண்டும். அப்போதே மக்களின் இறையாண்மை மதிக்கப்பட்டு ஒரு தேசிய கொள்கையின் கீழ் அனைவரும் உட்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 18, 19 ஆம் திருத்தங்களினாலேயே அரசாங்கம் ஸ்திரத்தன்மையை இழந்துள்ளது. ஆகவே இவ்விரு திருத்தங்களும் நீக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் வினவிய போது அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 18ஆவது திருத்தம் எந்த நோக்கத்திற்கு உருவாக்கப்பட்டது என்பதை ஜனாதிபதி தெளிவுப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. அரசியலமைப்பு விடயத்தில் அரசியல் தேவைகளையும், பக்கச்சார்பற்ற கருத்துக்களை துறந்து செயற்படுவது அவசியமாகும். 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் பல்வேறு தரப்பினரின் எதிர்பார்ப்பிற்கு அமைய பாரிய போராட்டத்தின் மத்தியில் உருவாக்கப்பட்டது.

ஜனநாயகத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிலைப்படுத்தியே அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. அரசியல் தலையீடுகள் இல்லாமல் சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டமையின் பயனை தற்போது அனைவரும் பெற்றுக் கொண்டுள்ளோம். இதனை ஒரு போதும் மறுக்க முடியாது. நீதித்துறையின் சுயாதீன தன்மையே இதற்கு சிறந்தொரு எடுத்துக் காட்டு.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூல வரைபை முழுமையாக எவ்வித மாற்றங்களும் இன்றி நடைமுறைப்படுத்திருந்தால் அரசியலமைப்பினை மையப்படுத்தி எவ்வித நெருக்கடிகளும் ஏற்பட்டிருக்காது. எவரும் அரசியலமைப்பினை விமர்சித்திருக்க மாட்டார்கள். மூல வரைபில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணம் அரசியல் அதிகாரங்கள் ஒரு தரப்பினருக்கு சென்று விடக் கூடாது என ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் எதிர்த்தமையே.

அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு செல்கின்றது. ஆகவே 19 ஆவது திருத்தத்தின் மூல வரைபில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டவர்கள் அமைச்சரவையிற்கு கூட்டு பொறுப்பு சொல்ல வேண்டிய பிரதமருக்கு அரசியல் அதிகாரங்கள் செல்கின்றது என்பதை கவனத்தில் கொள்ளவில்லை. ஒரு தனி நபர் மீதே அனைவரும் செல்வாக்கு செலுத்தினார்கள்.

அரசியலமைப்பை உருவாக்குவதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு தேவை என்பதாலும் , தேசிய அரசாங்கம் என்ற ரீதியில் ஜனாதிபதியின் தரப்பினரது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதாலும் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூல வரையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதுவே பல விளைவுகளை ஏற்படுத்தியது .

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்து செய்தால் பாராளுமன்றம் பலம்பெற்று மக்களாணை மதிக்கப்படும். அப்போது அனைவரும் ஒரு தேசிய கொள்கையின் கீழ் செயற்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

## கௌரவ சுரேன் ராகவன்

(ஆளுநர், வடக்கு மாகாணம்)



வடமாகாண சுகாதார திணைக்களங்களில் பல வருடங்களாக பதிற் சாரதிகளாக கடமை யாற்றியதனைக் கருத்திற்கொண்டு நிரந்தர சாரதி நியமனத்தினைப் பெற்றுத் தந்த கௌரவ வட மாகாண **ஆளுநர் சுரேன் ராகவன்** அவர்கட்கும் மற்றும் எமக்கு நிரந்தர சாரதி நியமனம் பெற்றுத் தர அர்ப்பணித்த அனைத்து **உயர் அதிகாரிகளுக்கும்** வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை சாரதிகள் சார்பில் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி கூறும் நாம் : நிரந்தர நியமனம் பெற்ற

வடமாகாண சுகாதார திணைக்களங்களின் சாரதிகள்.

(யாழ்.மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம்.)

(9365)




# 'சுப்பர்மன்' சகிப் சாகசம்

## பங்களாதேஷ் கலக்கல் வெற்றி



**யுவராஜுக்கு அடுத்து...**

உலக கிண்ண அரங்கில் ஒரு போட்டியில் 50 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்து, 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய இரண்டாவது 'சகலதுறை வீரர்' ஆனார் சகிப் (51 ஓட்., 5 விக்.,). 2011 உலக கிண்ணத் தொடரில் அயர்லாந்துக்கு எதிராக இந்தியாவின் யுவராஜ் சிங் (50 ஓட்., 5 விக்.,) இதுபோல சாதித்தார்.

◈ இந்தியாவின் கபில் தேவ் (1983), யுவராஜ் சிங்கிற்கு (2011) அடுத்து ஒரு உலக கிண்ணத் தொடரில் சதம் மற்றும் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்திய 3வது வீரர் ஆனார் சகிப்.

விக்கெட் ஒன்றை வேட்டையாடிய மகிழ்வில் பங்களாதேஷின் சகிப்

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் பங்களாதேஷ் அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 'சகலதுறை வீரராக' அசத்திய சகிப் அல் ஹசன் 51 ஓட்டங்கள் மற்றும் 5 விக்கெட்டுக்களைச் சாய்த்து வெற்றிக்கு கைகொடுத்தார்.

இங்கிலாந்தில் 12வது உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. சவுத் தாம்ப்டனில் நேற்று நடந்த லீக் போட்டியின் புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் இருந்த ஆப்கானிஸ் தான் அணி, பங்களாதேஷை எதிர்கொண்டது.

மழை காரணமாக 10 நிமிடம் தாமதமாகபோட்டிதொடங்கியது. தனது 100வது போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் குல்பதீன் களத் தடுப்பை தேர்வு செய்தார்.

**முஷ்பிகுர் அபாரம்**

பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ் (10), தமிம் இக்பால் ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. தமிம் இக்பால் (36) ஏமாற்ற, சகிப் அல் ஹசன் 51 ஓட்டங்கள் எடுத்தார். சௌமியா சர்கார் (3), மகமதுல்லா (27) சொதப்பினர்.

முஷ்பிகுர் 83 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கடைசிபந்தில் மொசாதெக் (35) போல்டானார். 50 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பில் முஜீப் அர் ரஹ்மான் 3, குல்பதீன் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**சகிப் 'சுழல்'**

ஆப்கானிஸ்தான் அணிக்கு குல்பதீன், ரஹ்மத் ஷா ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. சுழலில் மிரட்டினார் சாகிப் அல் ஹசன். இவரிடம், ரஹ்மத் ஷா (24), குல்பதீன் (47), மொஹமட் நபி (0), ஜட்ரன் (23) என வரிசையாக சரண் அடைந்தனர். ரஷிட் கான் (2) கைவிட்டார். கடைசியில் முஜீப் போல்டாக, ஆப்கானிஸ்தான் அணி 47 ஓவர்களில் 200 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 62 ஓட்டங்களால் வீழ்ந்தது. ஷென்வாரி (49) ஆட்டமிழக்காமல் இருந்தார். பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## காலிறுதியில் ஆர்ஜென்ரீனா



2 கோல் அடித்த மகிழ்ச்சியில் எகிறிக் குதிக்கும் ஆர்ஜென்ரீனாவின் மார்டினஸ்

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் காலிறுதிக்கு ஆர்ஜென்ரீனா அணி முன்னேறியது. கடைசி லீக் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் கட்டார் அணியை வீழ்த்தியது.

பிரேசிலில், கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் 46வது சீசன் நடக்கிறது. இதன் 'பி' பிரிவு லீக் போட்டியில் அர்ஜென்ரீனா, கட்டார் அணிகள் மோதின. காலிறுதிக்கு முன்னேற இப்போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் ஆர்ஜென்ரீனா களமிறங்கியது.

அபாரமாக ஆடிய ஆர்ஜென்ரீனா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆர்ஜென்ரீனா சார்பில் மார்டினஸ் (4வது நிமிடம்), அகுரோ (82வது) தலா ஒரு கோலடித்தனர்.


மற்றொரு 'பி' பிரிவு லீக் போட்டியில் கொலம்பியா அணி 1-0 என்ற கணக்கில் பராகுவே அணியை வென்றது.

லீக் சுற்றின் முடிவில் 'பி' பிரிவில் முதலிரண்டு இடங்களை பிடித்த முறையே கொலம்பியா (9 புள்ளி), ஆர்ஜென்ரீனா (4) அணிகள் காலிறுதிக்கு முன்னேறின.




## இக்கட்டான நிலையில் இங்கிலாந்து

### இன்று ஆஸியுடன் மோதல்



பயிற்சியின்போது இங்கிலாந்தின் ஜேசன் ரோய்

உலக கிண்ணத் தொடரின் முக்கிய லீக் போட்டியில் இன்று அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

இங்கிலாந்தில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடக்கும் முக்கிய போதலில், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து பலப்பரீட்சை நடத்துகின்றன. 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா 6 போட்டிகளில் 5 ல் வென்றது. இந்தியாவிடம் மட்டும் வீழ்ந்தது.

இன்று வென்றும் பட்சத்தில் முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறலாம். உலக கிண்ணத் தொடரில் கடைசி 12 போட்டிகளில் 11ல் வென்ற இந்த அணிக்கு 2 சதம், 2 அரைசதம் உட்பட இதுவரை 447 ஓட்டங்கள் எடுத்த, வோர்னர், ஒரு சதம், 3 அரை சதம் விளாசிய அணித் தலைவர் பின்ச் (396), ஸ்மித் (244), கவாஜா (187) கூட்டணி மீண்டும் கைகொடுக்கலாம். பந்துவீச்சில் 15 விக்கெட்டுக்களை வீழ்த்திய மிட்சல் ஸ்ராரக், கம்மின்ஸ் (11) ஜோடி, இங்கிலாந்துக்கு சிக்கல் தருவது உறுதி.

**கட்டாய வெற்றி**

இலங்கைக்கு எதிரான தோல்வியால் இங்கிலாந்து 'ஷொக்' ஆக உள்ளது. அடுத்து இந்தியா, நியூசிலாந்து என வலுவான அணிகளை சந்திக்கிறது. இன்றும் தனது பரம எதிரி அவுஸ்திரேலியாவை வெல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது.

ஜோ ரூட் (424 ஓட்.,), அணித் தலைவர் மோர்கன் (270) இருந்தாலும் ஆரம்ப வீரர் ஜேசன் ரோய் (4ல் 215 ஓட்.,) காயத்தால் களமிறங்க இயலாதது சிக்கல் தருகிறது. பந்துவீச்சில் ஆர்ச்சர் (15), மார்க் உட் (12) உதவ காத்திருக்கின்றனர்.


# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 10.07.2019 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறிப்பிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| மருத்துவபீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| இராமநாதன் உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புபணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப்படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C-6769) 24.06.2019

# 19 ஆவது அரசியல் திருத்தம் குறித்து ஜனாதிபதிக்கு ஒரு புரிதல் கிடையாது

## ஐ.தே.க.எம்.பி.ஹேஷ விதானகே விமர்சனம்



**(நாவலப்பிட்டி)**

**19 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு புரிதல் கிடையாது என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே தெரிவித்தார். 19 ஆவது அரசியல் திருத்தம் கொண்டுவரப்பட்டமையால்தான் 18 இல் இருந்த அனைத்துத் தீங்கு விளைவிக்கும் உட்பிரிவுகளையும் இரத்துச் செய்ய முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.**

நாவலப்பிட்டிவில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஹேஷ விதானகே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதிக்கு அவரது ஆலோசகர்களால் தெளிவூட்டப்படவில்லை.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அவர் அளித்த உறுதிமொழிகளை ஜனாதிபதி தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேண்டுகோளின்படியே 19ஆவது திருத்தம் இயற்றப்பட்டது.

19 ஆவது திருத்தத்தை கொண்டு வருவது என்ற உறுதிமொழியின் பிரகாரம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேன அதை இரத்துச்செய்ய வேண்டும் என்று கூறுவதனால் 6.2 மில்லியன் வாக்காளர்களின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

அத்தகைய அறிக்கைகள் மூலம் ஜனாதிபதி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சித்தால், 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி மாற்றத்தை ஏற்படுத்த பொது மக்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன என்றே கருத முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மலையக மக்களின் ஆதரவு பிரேமதாஸவின் வாரிசுக்கே

### சஜித் பக்கம் இராதாகிருஷ்ணன்



(லிந்துல)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மலையக மக்களின் ஆதரவு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் வாரிசாக யாராவது வருபவராயின் அவருக்கே என அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலை, லிந்துல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாம் இப்போது அடுத்த ஜனாதிபதித் தேர்தல் குறித்து தீர்மானம் எடுக்கும் காலம் உருவாகியுள்ளது. தற்போதைய ஜனாதிபதி மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென எமக்கு அறிந்து கொள்ள முடிந்தது. மலையக மக்களாகிய நாம், மலையகத்துக்கு எதையும் சாதித்துத் தர முடியுமான ஒரு ஜனாதிபதியையே நியமித்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.தே.க.சார்பில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில் அமைச்சர் இராதா கிருஷ்ணன் அவருக்கு ஆதரவாக கருத்து முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## செப்புத் தொழிற்சாலை ஊழியர்கள் 10 பேரின் விளக்கமறியலும் நீடிப்பு

### காசோலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு



கொழும்பு ஷங்கரிலா தற்கொலை குண்டு தாக்குதல்தாரிகளில் ஒருவரான இன்சாஃப் அஹமட்டுக்கு சொந்தமான வெல்லம்பிட்டிய செப்புத் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்கள் 10 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த வழக்கு விசாரணை நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, சந்தேகநபர் கருப்பையா ராஜேந்திரன் அப்துல்லா என்பவர் தனது பெயரில் இரண்டு காசோலைகளைப் பெற்றதாகத் தெரிவிக்கப்படுவதால் மேலதிக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொழிற்சாலை உரிமையாளருடன் நெருங்கிய உறவைப் பேணியதாகவும், அவ்வப்போது அவரிடமிருந்து பணம் பெறப்பட்டதாகவும் அரசு தரப்பு சட்டத்தரணிகள் கூறினர்.

எவ்வாறாயினும், சந்தேக நபருக்காக ஆஜரான சட்டத்தரணி இரண்டு காசோலைகள் குறித்த குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன் அரசு தரப்பு நீதிமன்றத்தை தவறாக வழிநடத்துவதாகவும் கூறினார்.

அதன்பிரகாரம் சந்தேக நபரின் பெயரில் காசோலைகள் வழங்கப்பட்டதா? இல்லையா? என்பது குறித்து அடுத்த அமர்வில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதவான் அரசு தரப்புக்கு உத்தரவிட்டார்.

அத்தோடு சந்தேகநபர்கள் 10 பேரின் விளக்கமறியலையும் ஜூலை 8 ஆம் திகதிவரை நீடித்து நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

14 மில்லியன் வாடிக்கையாளர்களின் மனம் கவர்ந்த Dialog இடமிருந்து

TRIPLE BLASTER

முற்கொடுப்பனவு மொபைல் Plan

D2D 1000 நிமிடங்கள்
D2D 1000 SMS
1250 MB Data
50% 4G போனஸ் உடன்

ரூ.260/-*
*வரி உள்ளடங்களாக கட்டணம் ரூ.345/-

Dialog
எதிர்காலம் இன்றே.

செயற்படுத்திக்கொள்ள ரூ.345/-ஐ ரீலோட் செய்யுங்கள் அல்லது #678# டயல் செய்யுங்கள்

# 19 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச்செய்ய வேண்டாம்!

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

**(கொழும்பு)**

**19 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டாம் என இலங்கையின் முன்னிலை தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களில் ஒன்றான பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்தது. தனிப்பட்ட காரணிகளின் அடிப்படையில் 19 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்தால் நாட்டுக்கு அது பொருத்தமாக அமையாது எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியது.**




19ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யாது அதில் திருத்தங்களைச் செய்ய முடியும்.

நல்ல அரச ஆட்சியொன்றை முன்னெடுப்பதற்கு 18 மற்றும் 19ஆம் திருத்தச் சட்டங்களை உடன் இரத்துச் செய்ய வேண்டுமென நேற்று முன்தினம் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிராகப் பதிலளிக்கும் வகையில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி, 19 ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்படக்கூடாது என வலியுறுத்தினார். (இ-7)

# 18,19 ஆவது திருத்தங்களை நீக்க இடமளியோம்-ஜே.வி.பி.



(கொழும்பு)

அரசியலமைப்பின் 18 மற்றும் 19 ஆவது திருத்தங்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு அவற்றை நீக்குவதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு ஜே.வி.பி கடும் எதிர்ப்பை வெளியிடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடனேயே 19 ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அதனை ஜனாதிபதி அவரது விருப்பத்திற்கேற்ப நீக்க முடியாது. அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. ஜே.வி.பி. மாத்திரமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஐக்கிய தேசியக் கட்சியினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நாம் நினைக்கவில்லை.

அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசையில் இருக்கும் மகிந்த தரப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மாத்திரமே ஜனாதிபதியின் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்களால் மாத்திரம் இதனை இல்லாமலாக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி உயர்தரமாவது சித்தியடைந்திருக்க வேண்டும்

## பிரதியமைச்சர் பரணவிதாரண தெரிவிப்பு



நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர், குறைந்த பட்சம் உயர்தரமாவது சித்தியடைந்தவராக இருக்க வேண்டுமென, திறன் அபிவிருத்தி , தொழில் பயிற்சி பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதாரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தகுதி அரசியல்வாதியொருவருக்கு இருக்க வேண்டும். அதற்காகச் சிறந்த பலமான அரசியல் தலைவரொருவர் அவசியம்.

அது மாத்திரமின்றி நாட்டுப் பிரச்சினை, உலகப் பிரச்சினை தொடர்பில் சிறந்த தெளிவுள்ள ஒருவராகவும் அவர் இருக்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தவிசாளரால் கோரிக்கைகள் முன்வைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப் படுத்தவுள்ள மூன்று அபிவிருத்தி திட்டங்களுக்கான அனுமதியை தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரியிருந்தனர்.

அறுகுவெளிப் பிரதேசத்தில் உப்பு உற்பத்திக்கான காணியை பயனாளிகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான அனுமதி அறுகுவெளிப் பகுதியில் சுற்றுலா மையம் அமைப்பதற்கான அனுமதி மற்றும் 7500 சதுர அடி பரப்பளவில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி ஆகிய மூன்று அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் கோரியிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேச பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். தனியார் உப்பு நிறுவனத்துடன் பிரதேசசபை இணைந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் விதவைகள் என 1500 பேர் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர். அந்தப் பயனாளிக் குடும்பங்களுக்கு தலா அரை ஏக்கர் அரச காணிகளை பகிர்ந்தளித்து பின்னர் அந்தக் காணிகளை உப்பு உற்பத்தியாளர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கும் போது பயனாளிகள் வருமானம் ஈட்ட முடியும். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 3500 பேருக்கு நிரந்தரத் தொழில் வாய்ப்பும் 1500 பேருக்கு பகுதிநேரத் தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்த முடியும். இந்தத் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தாது விட்டால் வேறு சிலர் தமது இலாபத்திற்காக செயற்படுத்துவார்கள். எமது பிரதேச வளங்கள் எமது பகுதி மக்களுக்கே பயன்பட வேண்டும். இது மக்கள் நலன் சார்ந்த திட்டம். இதில் தனங்கிளப்பு, மறவன்புலோ மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு உள்ளதா? என்று சிந்திக்க வேண்டும். அத்துடன் சுற்றுச் சூழல் அதிகார சபையினரிடம் இது தொடர்பான அனுமதியைப் பெற வேண்டும். நிதி நிலைமைகள் தொடர்பாகவும் சிந்தித்து செயற்பட வேண்டுமெனத் தெரிவித்தார். (5-30)

# இராசி பலன்

25.06.2019

ஆனி 10, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

அட்டமி பின்னிரவு 2.30 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 4.21 மணிவரை

சுபநேரம் 10.25 - 11.55 மணிவரை

இராகுகாலம் 2.55 - 4.25 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சந் | சுக் | சூரி, புத, ராகு |
| | | | செவ் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம்

உத்தரம்

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், வாகன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், புதிய பொருட்கள் வாங்க எடுத்த முயற்சி கைகூடும்.

**கடகம்:** மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், மறதியால் விட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்:** வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கன்னி:** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** நல்லவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தலைமைப் பதவிகள் உங்களை நாடி வரலாம், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் வருகை உண்டு, மகிழ்ச்சி கூடும் நாள், சுபகாரியப் பேச்சுகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடி கொள்ளும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எதிர்கால நலனில் அக்கறை கூடும்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், பிரபல மாணவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

**மீனம்:** திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வாக்கு சாதுரியத்தினால் வளம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு

# INVITATION FOR BIDS

## Department of Agrarian Development, Vavuniya.

1. The Chairman, District Procurement Committee on behalf of Department of Agrarian Development, Vavuniya invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. However limited to the bidders whose registration address should be within the administrative boundary of the **Northern Province**, to be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field and grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD)/Construction Industry Development Authority(CIDA) according to Circular Number 04/2016(i) dated 30.09.2016 of Ministry of Finance.

3. The Qualifications requirements are indicated in section - 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section- 5) of the bidding documents.

4. Bidder who eligible for VAT they should submit active VAT Registration Certificate along with Bid document.

5. Interested bidders may obtain further information from Department of Agrarian Development, Vavuniya and inspect the bidding documents at the same place on any working days from 9.00am to 4.00pm.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Commissioner, Department of Agrarian Development, Vavuniya. From 25.06.2019 until 08.07.2019 from 9.00 am to 2.30 pm upon payment of non-refundable fees of Rs1,000.00. The method of payment should be by cash.

7. Bids must be delivered to The Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Vavuniya by Registered Post or Directly put into the Tender Box on or before 10.00am on 09.07.2019. **Name of work and Contract number should mention in the left hand corner of Envelop. Original and Copy of Bid have to submit in separate Envelops.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or bidders representatives who choose to attend.

8. All Bids shall be accompanied by a Bid security in the form of Bid security included in section- 9. The amount and validity of bid security shall be as per the information given in the table below.

9. A pre-bid meeting will be held at Department of Agrarian Development, Vavuniya on 03.07.2019 at 10.00 am. Interested bidders may participate in this meeting on their own expenses.

10. Decision of the Procurement committee will be the final.

| Contract No | Description of Works | Estimate Amount (excluding taxes) (Mn) | Contract Period | Required Grade & Field | Bid Validity Period | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Bid Security Amount (Rs) | Validity Period |
| 281/12/17/94/02/01-01 | Navvi | 4.74 | 90 days | C8 or Above Irrigation & Land Drainage | 10/09/2019 | 48,000.00 | 08/10/2019 |
| 281/12/17/94/01-01 | Rakayankulam | 4.02 | 90 days | C8 or Above Irrigation & Land Drainage | 10/09/2019 | 41,000.00 | 08/10/2019 |

**Note: According to Circular Number 04/2016(i) dated 30.09.2016 of Ministry of Finance, C8 will be given preference.**

The Chairman,
Department Procurement Committee,
Department of Agrarian Development, Vavuniya.

(C-6767)


## கோப்குழுவின் விசாரணை பெறுபேறுகள் வெகுவிரைவில்



கடந்த காலங்களில் மலையகத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் செய்த ஊழல்களுக்கு, தற்பொழுது கோப்குழு விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. இந்த விசாரணையின் பெறுபேறுகள் வெகு விரைவில் கிடைக்கும் என மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை என்போல்ட் தோட்ட பகுதியில் பசும்பொன் வீடமைப்பு திட்டத்தின் 25 தனி வீட்டுத்திட்டத்தை நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


## திருத்தம்

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

**பதவி வெற்றிடம்**

21.06.2019 அன்றைய வலம்புரி பத்திரிகையின் 05 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் "இ" பகுதியை கீழ்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம்ஒன்றில் 08 வருடகால அனுபவம். இதில் சிரேஷ்ட முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவம் கட்டாயமாகும்/ க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 12 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

தலைவர் (C-6728)

பழமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (சுவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா:21 ½சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Scஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில் (உள்நாடு)<br>தொ.இ: B/9846 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Civil Engineer, London<br>எதிர்பார்ப்பு: Professional Qualified.<br>வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/9841 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 24 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Civil Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,ஆசிரியர் (உள்நாடு)<br>தொ.இ: B/9847 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA,ஆசிரியர், London<br>எதிர்பார்ப்பு: Professsional Qualified.<br>வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/9842 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 46 ½<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L,அச்சகம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/9848 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 2<br>கி.பா: 7<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:B.Com, ACCA, Accountant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/9852 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L, Dip.Physical Education, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: A/L,அரசதொழில்<br>தொ.இ: B/9849 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 4<br>கி.பா: சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:M.Sc, BIT, Senior Banking Staff<br>எதிர்பார்ப்பு:தகைமைக்கேற்றவரன் (உள்நாடு)<br>தொ.இ: G/9854 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## கிளி.ஊரியான்,கல்லாறு பகுதிகளில்
## தொடரும் சட்டவிரோத மண் அகழ்வால்
# கிராமங்களுக்குள் கடல்நீர் உட்புகும் அபாயம்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊரியான் மற்றும் கல்லாறுப்பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வினால் கடல் நீர் கிராமங்களுக்குள் புகும் அபாயநிலை காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்லாறு மற்றும் ஊரியான் தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் இந்தப்பிரதேசத்தின் கரையோரப்பகுதிகளில் இவ்வாறான மண் அகழ்வுகள் இடம்பெறுவதனால் கடல்மட்டத்தை விட, மிக ஆழமாக விவசாய நிலங்களிலும் இந்த மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கடல் நீர் உட்புகும்அபாயநிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, தட்டுவன்கொட்டி மற்றும் ஊரியான் போன்ற பகுதிகளில் கடந்த 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இந்தப்பகுதிகளில் காணப்பட்ட உவர்நீர்த்தடுப்பணைகள் அழிந்தும் சேதமடைந்தும் காணப்பட்டதனால் பெருமளவான விவசாய நிலங்கள் உவர் நிலங்களாக மாறின.

இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வினால் மேலும் இந்தப்பிரதேசங்கள் உவர் நிலங்களாக மாறுகின்ற அபாய நிலை தோன்றியுள்ளது.

இதேபோன்று கல்லாறுப்பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு அண்மித்த பகுதிகளிலும் சட்டவிரோதமணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மணல் அகழ்வுகள் தொடர்பில் பொதுமக்களாலும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளாலும் பொலிஸாருக்கும் அவசர பொலிஸ்சேவை இலக்கத்திற்கும் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் இந்த மணல் அகழ்வுகள் மாவட்டத்திலுள்ள உயர் அதிகாரிகளின் துணையுடன் முன்னெடுக்கப்படுவதாக மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.(9-315)

# பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம்

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பூநகரி பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் பூநகரிப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் வருடந்தோறும் வெளியிடப்படும் "பூந்துணர்" மலர்க்குழுவும் தெரிவு செய்யப்படவிருப்பதால் கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளார்கள். (9-84)

# பாலை மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது



இலுப்பக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பி ஆற்றுப் பகுதியில் ஒரு தொகுதி பாலை மரக்குற்றிகளுடன் உழவு இயந்திரத்தின் சாரதி ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை இலுப்பக்கடவை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலுப்பக்கடவை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஜ. சூவியந்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று இலுப்பக்கடவை சிப்பி ஆற்றுப்பகுதிக்குச் சென்று தேடுதல்களை மேற்கொண்டனர்.

இதன் போது உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்ட நிலையில் ஒரு தொகுதி சீவப்பட்ட பாலை மரக்குற்றிகளை மீட்டுள்ளனர். அத்துடன் குறித்த உழவு இயந்திரத்தின் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பாலை மரக்குற்றிகள் பல இலட்சம் ரூபாய் பெறுமதியானது என தெரிய வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பாலை மரக்குற்றிகள் இலுப்பக்கடவை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.(9-285)



# கிளி.முழங்காவில் வைத்தியசாலை வரை உள்ளூர் பேருந்து சேவையை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி முழங்காவில் வைத்தியசாலை வரையான பேருந்து சேவையினை மேற்கொள்ள வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி ஜெயபுரம், வன்னேரிக்குளம், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி,வேரவில் போன்ற பின்தங்கிய கிராமங்களுக்கான மருத்துவ சேவையினை வழங்கும் வைத்தியசாலையாக காணப்படும் முழங்காவில் ஆதார வைத்தியசாலை பூநகரி மன்னார் ஏ-32 வீதியின் முழங்காவில் சந்தியிலிருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி கிராமங்களில் இருந்து வைத்திய தேவைகளுக்காக வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள், மாற்றுத்திறனாளிகள் முதியவர் கர்ப்பவதிகள் ஏ-32 பிரதான வீதியிலிருந்து கால்நடையாக அதிக பணத்தினை செலவு செய்து அல்லது ஆட்டோக்களில் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே வன்னேரிக்குளம், கிராஞ்சி, வலைப்பாடு, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து செல்லும் உள்ளூர் பேருந்து சேவைகள் முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரை மேற்கொள்ளப்படவேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-315)

# "நான் போதையை எதிர்க்கிறேன்"
## தேசிய வேலைத்திட்டம் வவுனியாவில் ஆரம்பம்





ஜனாதிபதி செயலகத்தின் நிகழ்ச்சித்திட்டத்தில் ஜூன் 23 முதல் மாவட்டம் தோறும் போதையற்ற தேசிய வார வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நேற்றுக் காலை வவுனியா மாவட்ட செயலகத்தில் "நான் போதையை எதிர்க்கின்றேன்" வேலைத்திட்டம் உதவி அரசாங்க அதிபர் கமலதாஸ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு ஒரே நேரத்தில் எதிர்ப்புப்பட்டி அணிவிக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் மாவட்ட செயலக திணைக்கள அதிகாரிகள். உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தினால் ஜூன் மாதம் 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட போதையற்ற தேசம் வேலைத்திட்டத்தில் இவ்வாரத்தில் வவுனியா மாவட்டத்தில் 14 விழிப்புணர்வு பிரசாரங்களும் இன்று 50 வாகனப்பேரணி அதாவது அனைத்துத்திணைக்களங்களைச் சேர்ந்த போதைப்பொருள் எதிர்ப்பு வாகனப் பேரணி வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நகரை நோக்கிச் செல்லவுள்ளது.

நாளை புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் போதை ஒழிப்பு எதிர்ப்பு வாசகங்களைத் தாங்கிய 100 பலூன்கள் வானில் பறக்க விடப்படும் நிகழ்வு காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாகவும் அனைத்துத்திணைக்கள உத்தியோகத்தினரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

## கல்முனை உப பிரதேச செயலகத்தினை
# தரமுயர்த்த ஆதரவு
## புளொட் தீர்மானம் நிறைவேற்றம்

கல்முனை உப பிரதேச செயலகத்தினை தரமுயர்த்த உள்ள தடைகள் குறித்து வன்மையாகக் கண்டிப்பதாக புளொட் பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தவகையில், முழுமையான அதிகாரத்துடனான பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு தமிழர் தரப்பில் கடந்த முப்பது வருடகாலமாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஏற்படுத்தப்படும் தடைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, தரமுயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையும் ஆதரித்து ஒத்துழைப்பு வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் 9 ஆவது பேராளர் மாநாட்டில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனைவிட தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தக் கூடியவாறு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான, நியாயமான நிரந்தரத் தீர்வொன்றை எட்டும் பொருட்டு தொடர்ந்தும் சாத்தியமான அனைத்து வழிகளிலும் முயற்சித்து இலக்கை அடைதல்.

போருக்குப் பின்னரான புதிய அரசியல் சூழலைக் கருத்தில் கொண்டு அரசியல் கூட்டு முன்னணி ஒன்றிற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஒத்துழைத்தல், இன்றைய சூழலில் அத்தகையதொரு கூட்டு முன்னணியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தும் நோக்கில், தமிழ் மக்களின் நலன்சார்ந்து இயங்கிவரும் இதர தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுதல்.

அனைத்து இயக்கங்களினதும் முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் அனைவரும் மீண்டும் தன் சமூகத்தில் கௌரவத்துடனும் தன்னம்பிக்கையுடனும் ஒன்றித்து வாழக்கூடிய வகையில், அவர்களது சமூகப் பொருளாதார வாழ்வை வளப்படுத்துவதற்கான உதவிகளை அரசிடமிருந்தும் புலம்பெயர் தமிழ் சமூகத்திடமிருந்தும் சாத்தியமான அனைத்து தரப்பினரிடமிருந்தும் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றுடன் இலங்கைக்கு சர்வதேச அழுத்தம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, வடக்கு கிழக்கில், காணிகளை விடுவிக்கப் போராடுதல், வடக்கு, கிழக்கில் அபிவிருத்தினை ஊக்குவித்தல், கல்வித்துறை மேம்பாடு, இலங்கையின் அனைத்து முற்போக்கு அரசியல் மற்றும் சமூகசக்திகளுடன் இணைந்தும் பாடுபடுதல், சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆதரவளித்தல் உள்ளிட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. (9-250)

# மஸ்தான் எம்.பியால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு



வவுனியா கூமாங்குளம் சுப்பஸ்ரார் விளையாட்டுக்கழகத்திற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானினால் நேற்று முன்தினம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவ்வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினரின் விசேட நிதியிலிருந்து வன்னி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வுகளின் தொடர் அங்கமாக கூமாங்குளம் சுப்பஸ்ரார் விளையாட்டுக்கழக தலைவர் விவேகானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9)

# ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தினால் பதவி விலகப்போவதாக மகிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களை நடத்தாமல், ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதாயின் பதவியை விட்டு விலகப் போவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய எச்சரித்தார்.

முதலில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டியது தேர்தல்கள் ஆணைக் குழுவின் கடமை. அதுவே நடக்கும் என்று நாட்டுக்கு உறுதியளித்திருக்கிறேன்.

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதென்றால், அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் நான் ஆணைக்குழுவின் தலைவர் பதவியை விட்டு விலகுவேன்.

எனினும், ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து விலகமாட்டேன் என மக்களுக்கு உறுதியளிக்கிறேன்." என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவராக மகிந்த தேசப்பிரிய பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குறை'களை' பதிகம் 49

## புனர்வாழ்வு பெற்றோரின் உடல்நலம் காக்க உதவுமினே!

முன்னம் தவத்திரு யோகர் சுவாமிகள்
காசியில் இருந்து கடிதம் எழுதினார்

தமிழர் வாழ்வு தொட்டே
அப்பெரும் ஞானி எழுதிய முடங்கல்
அத்தனையும் உண்மை என்பது போல்
நாளும் நடக்கின்ற நாசங்கள்
நம் தமிழ் இனத்தை சிதைக்கிறது

விபத்து மரணங்கள்
புகைவண்டி மோதும் சாக்கள்
நீர் நெருப்பு எனும்
பஞ்சபூதம் தரும் மரணங்கள்
இப்படி எத்தனை அழிவுகள்
போதாதென்று- இப்போ
புனர்வாழ்வு பெற்று வந்தார்
திடீரென்று இறந்தார்
எனும் செய்தி நீண்டு செல்கிறது
ஏன் இப்படி
தமிழ்ச்செல்வி முதல்
பாடகர் சாந்தன் வரை
புனர்வாழ்வு பெற்று வந்தோரே

தொற்று நோய்த் தடை என்று
புனர்வாழ்வு மையத்தில்
போட்டுவிட்ட ஊசிதான்
பொத்தென்று வீழ்த்தி
பொசுக்கென்று உயிரைக்
கொண்டேகுவதாகக் கேள்வி

என் செய்வது
கருவறுக்க மருந்தும்
உயிரறுக்கும் ஊசியும் ஏற்றுகின்ற கொடுமை
இலங்கையைத் தவிர வேறெங்குள்ளதோ
என் செய்வோம் ஏது செய்வோம்

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள்
வாழலாம் என்று நம்பியிருக்க
வஞ்சகர் ஏற்றிய ஊசி
பொறுத்திருந்து கால்தட்டி வீழ்த்துகிறது
பொல்லாத ஊசி என்ன அது
சோதித்தறிதல் என்றொரு வழிமுறையை
யாழ். மருத்துவபீடத்து சமுதாயத்துறை
முன்னெடுத்துச் சென்றால்
முழுமையான தகவலைப் பெற்று
ஏற்றிய ஊசிக்கு மாற்றீடாய்
மருந்துகொடுத்து புனர்வாழ்வு பெற்ற
நம் சோதரரின் உயிர்காக்கும்
பெரும்பணியைச் செய்தால்
நல்லதாக எல்லாம் நடக்கும்

ஆதலால் புனர்வாழ்வு பெற்றோரை
மருத்துவச் சோதனைக்குட்படுத்தி
அவர் நோய் தீர்க்கவென்றே
குறை களை பதிகம் பாடுவோமே

சங்கத்தனார்

# இலங்கைத் தீவின் 90 வீதமான பவளப் பாறைகள் அழிவு

(கொழும்பு)

இலங்கைத் தீவைச் சுற்றியுள்ள 90 வீதமான பவளப் பாறைகள் இப்போது அழிந்து விட்டதாக, கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளர் கலாநிதி ரேனி பிரதீப் குமார தெரிவித்தார்.

"காலநிலை மாற்றம், மாசுபாடு, சட்டவிரோத மீன்பிடி முறைகள் மற்றும் கடலுக்குள் வீசப்படும் பொலித்தீன் அளவு ஆகியவற்றால் இலங்கைத் தீவின் பவளப் பாறைகள் அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன என்பதை ஆராய்ச்சி நிரூபித்துள்ளன.

எனவே அவசர நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், ஒவ்வொருவரும் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்காவிட்டால், அடுத்த பத்தாண்டுகளில் பவளப்பாறைகள் முற்றாக அழிந்து விடும் அச்சுறுத்தல் உள்ளது.

உலகில் வேறு எங்கும் காணப்படாத- அழகான பவளப் பாறைகள் இன்னும் நாடு முழுவதும் உள்ள கடல் பகுதிகளில் காணப்படுகின்றன.

அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் 10 ஆண்டுகளில் வண்ணமயமான பவளப் பாறைகளை பார்க்கின்ற வாய்ப்பை இலங்கையர்கள் இழக்க நேரிடும்.

தற்போதைய அழிவு நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதில் அரசு சாரா நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் பொது மக்கள் கைகோர்க்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல்

# முஸ்லிம் புலம்பெயர் அமைப்பு ஜெனிவாவில் விசேட அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலை முன்னிலைப்படுத்தி ஐரோப்பாவில் முதன் முறையாக இலங்கை முஸ்லிம் புலம்பெயர் அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலிருந்து சென்று பிரான்சில் அரசியல் புகலிடம் பெற்றுள்ள இலங்கை முஸ்லிம்கள் மூவரால் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதாகவும், இதற்கான நிதி சேகரிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டது.

இந்த முஸ்லிம் புலம்பெயர் அமைப்பு கடந்த வாரம் முதல் ஐரோப்பிய நாடுகளிலுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் உதவியை பெற்றுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் முஸ்லிம்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்ததாக தெரிவித்தே இவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்த அமைப்பு முதல் தடவையாக இஸ்லாமிய அடிப்படைவாதிகளை இணைத்துக் கொண்டு ஜெனிவா நகரிலுள்ள மனித உரிமைகள் அமைப்புக்கு முன்னால் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தவர்கள், தமக்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் ஆதரவு உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இலங்கை முஸ்லிம் மக்களை வஞ்சிக்கும் வகையில் சிங்கள பௌத்தர்கள் செயற்படுவதாக தெரிவித்து, இந்த முஸ் லிம் புலம்பெயர் அமைப்பால் ஜெனிவா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டதாகவும் இந்த முஸ்லிம் புலம்பெயர் அமைப்பு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்பொன்றுக்கு பணம் செலுத்தி, அந்த அமைப்பின் பெயரின் கீழ் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உரையாற்றுவதற்குப் பதிவு செய்துள்ளதாகவும் சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியது. (இ-7)

# விசாரணைகள் நிறைவடையும் வரை அமைச்சை பொறுப்பேற்க மாட்டேன்

## றிசாத் திட்டவட்டம்

(கொழும்பு)

தனக்கு எதிரான விசாரணை நடவடிக்கைகள் நிறைவடையும் வரை, அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கமாட்டேன் என நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் மேற கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சுப் பொறுப்புகளை பெறுவதற்கு தமக்கு அவ்வளவு அவசரம் இல்லையென்றும், முதலில் இடம்பெறும் விசாரணைகளின் அறிக்கை கிடைக்க வேண்டும் என்றும் றிசாத் தெரிவித்தார்.

அத்துடன் எந்த நேரத்திலும் அனைத்து விசாரணைகளுக்கும் தயாராகவிருப்பதுடன், அதற்கான ஒத்துழைப்பை வழங்கவும் தயாராகவிருப்பதாகவும் றிசாத் தெரிவித்தார். (இ-7)

# கண்ணீர் அஞ்சலி


அமரர்.

**மேரி பிரான்ஸ்சிக்கா ஜோக்கிம்பிள்ளை**

எமது திணைக்களத்தின் நிதிக் கிளையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி. ஜரின் காமன் பிறின்ஸ் சார்ள்ஸ் அவர்களுடைய அன்புத் தாயார் அமரர். மேரி பிரான்சிஸ்கா ஜோக்கிம்பிள்ளை அவர்களை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C-6765)



## முல்லைத்தீவு தேராவில் பகுதியில்

# தொழில் வாய்ப்பின்றி அல்லல்படும் குடும்பங்கள்

## வாழ்வாதார உதவிகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தேராவில் பகுதியில் வாழும் அநேகமான குடும்பங்கள் தொழில்வாய்ப்பின்றி வாழ்வதனால் அவர்கள் அன்றாடம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தமக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவின் கீழ் உள்ள தேராவில் கிராமத்தில் கடந்தகால யுத்த சூழ்நிலைகளால் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கால் ஏக்கர் காணிகள் வீதமும் அரை ஏக்கர் காணிகள் வீதமும் வழங்கப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டனர். இவ்வாறு குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் கடந்த 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் இக்கிராமத்தை அண்டிய பகுதிகளில் தொழில் வாய்ப்புக்களை வழங்கக்கூடிய தொழில் நிறுவனங்கள், விவசாயப் பண்ணைகள் காணப்பட்டன.

இவற்றில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று தமது குடும்பங்களை கொண்டு நடத்தினர்.

யுத்தத்தின் பின்னரான மீள் குடியமர்வையடுத்து இங்குள்ள குடும்பங்களில் கூடுதலான குடும்பங்கள் யுத்தத்தில் தமது உழைப்பாளர்களை இழந்த நிலையிலும் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் பெரும் சிரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இப்பகுதி மக்கள் வாழ்வாதாரத் தொழில்கள் இல்லாத காரணத்தால் பலர் சட்ட விரோத தொழில்களில் ஈடுபடுகின்ற நிலை காணப்படுகின்றது.

போரில் அதிகம் பாதிக்கப்பட்ட இந்தப்பகுதி மக்களுக்கு இதுவரை முழுமையான எந்த வாழ்வாதார உதவிகளும் கிடைக்கவில்லை. இதனால் இங்குள்ள பலர் அன்றாட உணவிற்கே பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால் சட்டவிரோதமாக மரங்களைவெட்டுதல் ,வேட்டையாடுதல் , கசிப்பு உற்பத்திகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை குடும்ப வறுமை காரணமாக பலர் தமது கல்வியைக்கூடத் தொடரமுடியாத நிலையில் அதிகமான சிறார்கள் உள்ளனர் என்றும் இதனைக் கருத்தில் கொண்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுத்தரவோ அல்லது இக்கிராமத்தை அண்டிய பகுதிகளில் தொழில் வழங்கும் இடங்களையோ ஏற்படுத்தித் தரவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## பூநகரி பிரதேசத்தில் போதை ஒழிப்பு செயற்றிட்டம்

பூநகரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் போதைப்பொருள் ஒழிப்பு வாரத்திற்கான வேலைத்திட்டம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வரை நடை பறவுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் த.ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் போதை ஒழிப்பு நிகழ்வு ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் 23 ஆம் திகதி முழங்காவில் கந்தை மைதானத்திலும் நேற்று பூநகரி பிரதேச சபையிலும் நடைபெற்றது. இன்று முழங்காவில் ம.வி. தேசியப் பாடசாலையிலும் 26 ஆம் திகதி பூநகரி பிரதேச சபையிலும் 28 ஆம் திகதி பூநகரி மத்திய கல்லூரியிலும் 29 ஆம் திகதி பூநகரி வலைப்பாடு பொது நோக்கு மண்டபத்திலும் 30 ஆம் திகதி முழங்காவில் பொது நோக்கு மண்டபத்திலும் ஜூலை முதலாம் திகதி பிரதேச சபையிலும் நடை பெறும் எனவும் தவிசாளர் தெரிவித்தார்.

மேற்படி ஒவ்வொரு நிகழ்விலும் அப்பகுதி பிரதேச சபை உறுப்பினர்களும் உப அலுவலகப் பொறுப்பாளர், வருமானப் பரிசோதகர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (9-84)

## கிளிநொச்சி கிராமப்புறங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு

கிளிநொச்சி, இராமநாதபுரம், புதுக்காடு, அழகாபுரி போன்ற கிராமங்களில் தொடர்ந்தும் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக்காணப்படுவதுடன், யானைகள் பெருமளவான பயிர்ச்செய்கை களையும் அழித்து நாசம் செய்து வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் புதுக்காடு, இராமநாதபுரம், அழகாபுரி, மாயவனூர் போன்ற கிராமங்களில் என்றுமில்லாதவாறு அண்மைய நாட்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறித்த பிரதேசங்களுக்குள் மாலையானதும் உள்நுழையும் யானைகள் பொதுமக்களின் பெருமளவான விவசாயச் செய்கைகளை அழித்து வருகின்றன.

குறிப்பாக, இந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற பயிர்ச்செய்கைள் மற்றும் தென்னை போன்ற பயன்தரு மரங்களையும் அழித்து வருகின்றன. இரவு வேளைகளில் இவ்வாறு யானைகளின் அச்சுறுத்தல்களால் உயிராபத்துக்கள் ஏற்படும் ஆபாயநிலை காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். கல்மடுக்குளம் மற்றும் இரணைமடுக்குளத்தினுடைய காட்டுப்பகுதிகள் ஊடாக இந்த யானைகள் ஊர் மனைகளுக்குள் நுழைந்து இவ்வாறு ஆபத்துக்களை ஏற்படுத்துவதாக குறிப்பிட்ட பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (9-315)

## முல்லையில் கடலுணவுகளின் விலை திடீர் அதிகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில், கடல் உணவுகளின் விலையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக, மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் கடற்றொழி லாளர்களிடம் கேட்டபோது, முல்லைத்தீவு கடலில் அதி கரித்து செல்லும் சட்டவிரோத படகுகளின் எண்ணிக்கையும் தற்போது ஏற்பட்டுள்ள இயற் கையின் மாற்றமும் கடும் காற்று காரணமாக கடலில் மீன்கள் படுவதில்லை என்றும் தெரி வித்துள்ளார்கள்.

இந்நிலையில், முல்லைத்தீவு சந்தை, முள்ளியவளை, தண் ணீரூற்று, புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, விசுவமடு, மூங்கிலாறு போன்ற பகுதிகளில் உள்ள சந்தைகளில் கடல் உணவுகளின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (9)

## முல்லை.மாவட்ட கரையோரப் பகுதிகளில் வெளிச்ச வீடுகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரையோரப்பகுதிகளில் இதுவரை வெளிச்சவீடுகள் அமைக்கப்படாமையினால் ஆழ் கடலுக்குச்செல்லும் தொழிலாளர்கள் கரைதிரும்புவதில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்வதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 73 கிலோமீற்றர் நீளமான கரையோரப்பகுதிகளை உள்ளடக்கிய கடற்பிரதேசத்தில் சுமார் 4500 இற்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் முல் லைத்தீவு கரையோரப்பகுதியில் எந்த இடத்திலும் இதுவரை வெளிச்ச வீடுகள் அமைக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள கடற்றொழிலாளர்கள் ஆழ்கடல் தொழிலுக்குச்சென்று கரை திரும்புவதில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது, முள்ளிவாய்க்கால், மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த கடற்றொழிலாளர்கள் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தின் வெளிச்சத்தை அடையாளப்படுத்தியே கரையை அடைவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கரையோரங்களில் வெளிச்சவீடுகள் இன்மையால் தொழிலுக்குச்சென்று சிலவேளைகளில் திசைமாறி வேறு கரைகளுக்குச்சென்று பின்னர் தமது துறைகளுக்கு வருவதாகவும் இதனால் அதிக எரிபொருள் செலவினையும் எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

தமக்கு திசை காட்டிகள் வழங்கப்பட்டிருந்தாலும் எல்லா மீனவர்களுக்கும் அவற்றை வைத்து கரைதிரும்ப முடியாது என்று பிரதேச மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கரையோரத்தில் பிரதானமாக அமைக்கப்படவேண்டிய வெளிச்சவீடுகள் மற்றும் இடிதாங்கிகள் என்பவற்றை அமைத்துத்தருமாறு கடற் றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)




## இலங்கை இந்து கட்சியின் மாதாந்த கூட்டம்

இலங்கை இந்து கட்சியின் 21 ஆவது மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி கந்தன் குளம் செல்வா நகரில் உள்ள "ஓம் சக்திவேல்" கோவிலில் நடை பெற்றது.

ஓம் சக்திவேல் கோவில் தலைவர் ந.சுதாகரன் சக்திவேல் (லண்டன்) தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் கட்சி தலைவர் கந்தையா நடேசபிள்ளை (கிளிநொச்சி) , செயலாளர் தேசகீர்த்தி வை.மோகனதாஸ் (யாழ்ப்பாணம்) , உப செயலாளர் அ.மாதவன், வவுனியா (சிதம்பரம்.பழனி முருகன் ஆலய தலைவர்) , உபதலைவர் ஸ்ரீக்காந்தன் (அநுராதபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தலைவர்), கணக்காய்வாளர் மற்றும் வெளிவிவகார சட்ட ஆலோசகர் திரிமாறன் (மட்டு.அம்பாறை), மற்றும் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (9)

## ஊடகங்களை வெளியேறுமாறு பணித்த ஆளுநர்; எதிர்ப்பு தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள்



முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்துக்குழு கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குழுவின் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர்களைப் பார்த்து ஆளுநர் சுரேன் ராகவன், தனியார் ஊடகங்கள் யார் எனக் கேட்டு தனியார் ஊடகங்களை வெளியேறுமாறும் , பின்னர் கூட்டத் தீர்மானங்களை வழங்குவதாகவும் அரச ஊடகங்கள் மட்டும் இருக்குமாறும் கேட்டுகொண்டார்.

இது அரச கூட்டம். அரச விடயங்கள் பற்றி மக்கள் பிரதிநிதிகளுடன் அரசு ஊழியர்கள் கலந்துரையாடும் விடயம் எனவும் ஊடகங்கள் இருக்கத்தேவையில்லை எனவும் தனியார் ஊடகங்களை வெளியேறுமாறு பணித்தார்.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இதுவரை காலமும் ஊடகங்களின் முன்னிலையில் தான் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அந்த வழமையை மாற்ற வேண்டாம். மற்றும் அரசாங்க ஊடகங்களை அனுமதித்து தனியார் ஊடகங்களை வெளியேற வேண்டும் எனக் கூறுவது பொருத்தமல்ல எனத் தெரிவித்தார்.

இடையில் குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, ஊடகங்கள் அனுமதிக்கப்படவேண்டும். அவ்வாறு வெளியில் அனுப்ப முடியாது. கூட்டத்தில் நடைபெறும் விடயங்களை மக்கள் அறியவேண்டும். நாங்கள் என்ன பேசுகின்றோம் என்பதை மக்கள் அறிய வேண்டும் எனத்தெரிவித்தார்.

இதன்போது மீண்டும் சிவசக்தி ஆனந்தன் எம்.பி., 19 ஆவது திருத்தச் சட்டத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் தகவல் அறியும் உரிமை இருக்கின்றது எனத் தெரிவித்தார். இடையில் குறுக்கிட்ட ஆளுநர், ஆம் அவ்வாறு சட்டம் இருக்கின்றது உண்மை. ஆனால் ஒவ்வொரு கூட்டத்தையும் ஒவ்வொரு பேச்சு வார்த்தையையும் அறிய வேண்டும் என இருக்கின்றதா? எனக் கேட்டார். அதற்கு பதிலளித்த சிவசக்தி ஆனந்தன், ஆம் கட்டாயம் அவ்வாறு அறிய வேண்டும். இங்கே நடைபெறும் விடயங்களை, இங்கே பேசப்படும் விடயங்களை இந்த மாவட்டத்தின் மக்கள் அறிய வேண்டும். அந்த மக்களுக்கு அது தெரிய வேண்டும்.

இதனால் ஆத்திரமடைந்த ஆளுநர், நான் ஊடக எதிர்ப்பாளன் அல்ல. இங்கே நடைபெறும் விடயங்களை நான் பார்வையிடுகின்றேன். நீங்கள் கூட்டத்தை நடத்துங்கள். நான் ஊடகங்களுக்குப் பேச வரவில்லை எனத் தெரிவித்துவிட்டு அமர்ந்துகொண்டார். இதனால் சிறிதுநேரம் அமளிதுமளி ஏற்பட்டது. தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் விவாதங்களையடுத்து ஊடகங்கள் தமது பணியை மேற்கொள்ள இடமளிக்கப்பட்டது. (9)

# மாற்று அரசு ஒன்றை உருவாக்க வேண்டும்

## என்பதே எமது நிலைப்பாடு-வாசுதேவ

**(கொழும்பு)**

**நாட்டின் பாதுகாப்பற்ற சூழலில் உடனடியாக தேர்தல் ஒன்றுக்குச் சென்று மாற்று அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் சமல் ராஜபக்ஷவானால் எதிர்ப்பின்றி எமது முழுமையான ஆதரவை வழங்குவோம்.

அதேபோல் கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதென்றால் எம்மிடம் வெளிப்படையாக அதனைத் தெரிவிக்க வேண்டும். கோத்தபாய ராஜபக்ஷவுடன்




பேசிப்பார்த்து எமது நிலைப்பாட்டுக்கு ஏற்றாற்போல் இருந்தால் அவரை ஆதரிப்போம்.

நாட்டின் பாதுகாப்பற்ற சூழலில் உடனடியாகத் தேர்தல் ஒன்றுக்குச் சென்று மாற்று அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி-பிரதமர் இருவரும் ஒருவருக்கு ஒருவர் குற்றங் கூறிக்கொண்டு தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டு வருவதால் இறுதியாக நாட்டுக்கே பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த ஆட்சியாளர்களை நீக்கிவிட்டு மீண்டும் எமது அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

# மாயமான முஸ்லிம் நபரின் சடலம் மண்ணால் மூடப்பட்ட நிலையில் மீட்பு



(பல்லேவெல)

நிக்கவெஹெர பல்லேவெல பகுதியில் நபர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து புதைக்கப்பட்ட நிலையில், 28 நாட்களுக்குப் பின் குறித்த சடலம் காணாமல் போயுள்ள சம்பவம் குறித்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கலேவெல பொலிஸாருக்கு நேற்றுக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய விசாரணை மேற்கொண்ட போது கலேவெல பல்லேவெல பகுதியில் முஸ்லிம் மயானத்தில் கடந்த 28 நாட்களுக்கு முன்னர் புதைக்கப்பட்டிருந்த சடலமே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

குறித்த சடலம் தோண்டியெடுக்கப்பட்ட அதே இடத்திற்கு அருகில் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த மேலும் இரண்டு குழிகளும் தோண்டப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் காணாமல் போன சடலம் முருங்கை செய்யப்பட்டிருந்த பகுதியில் மண்ணால் மூடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

இவ்வாறு மர்மமான முறையில் காணாமல் போன சடலம், கலேவெல - பல்லேவெல பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஹபிபி லெப்பை மன்சூர் என்பவரின் சடலம் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்தது.

இந்நிலையில் சடலத்தைத் தோண்டி எடுத்தது யார்? எதற்காக தோண்டியெடுக்கப்பட்டது என்பது தொடர்பில் இதுவரை அறியப்படவில்லை.

எனினும் சடலம் தொடர்பில் மீளவும் நீதவான் நீதிமன்றத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டு அடுத்தகட்ட விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் சடலம் மீட்கப்பட்ட இடம் மற்றும் மயானத்திலும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சர்ச்சைக்குரிய தனியார் பல்கலை; குறித்த அறிக்கை அமைச்சரவையில்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் குறித்த அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை இந்த அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி, மனிதவள அபிவிருத்தி மேற்பார்வைக் குழு தெரிவித்தது.

குறித்த அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, சர்ச்சைக்குரிய பல்கலைக்கழகத்திற்கு நிதிகிடைத்த விதம் மற்றும் அதன் நிர்மாணம் தொடர்பாக பாரிய பிரச்சினை நிலவுவதாகவும் அது குறித்து சவுதி அரேபிய அரசாங்கத்தை இணைத்துக்கொண்டு இராஜதந்திர ரீதியிலான விசாரணை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என கல்வி, மனிதவள அபிவிருத்தி மேற்பார்வைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-7)

# 19ஐ எதிர்த்த என்னை அறிவில்லாதவன் என்றனர்

## சரத் வீரசேகர நினைவுபடுத்தல்

(கொழும்பு)



அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது நான் மாத்திரமே அதற்கு எதிர்ப்பை வெளியிட்டேன். எனினும் அப்போது என்னை அறிவில்லாதவன் என்றும், இனவாதி என்றும் தூற்றினார்கள்.

ஆனால் இப்போது ஜனாதிபதியே 19 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறார். இருப்பினும் இனிமேல் அதனை நீக்குவதென்பது கடினமானதொரு காரியம்.

இது நாட்டிற்குப் பாதகமானது என்ற விடயத்தை ஜனாதிபதி 4 வருடங்களுக்கு முன்னரேயே சிந்தித்திருக்க வேண்டும் என்று, ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தம் சர்வாதிகாரத்தையும், 19 ஆவது திருத்தம் நிலையற்ற அரசாங்கத்தையுமே ஏற்படுத்தியிருக்கின்றன.

இவ்விரு திருத்தங்களையும் இரத்துச் செய்தால் மாத்திரமே மக்களாணையை மதிக்கும் ஒரு அரசாங்கத்தை உருவாக்க முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மாத்திரம் அதற்கு எதிராக வாக்களித்தார்.

எனவே அவரிடம் இதுகுறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (இ-7)

## சிறுநீரகங்கள் செயலிழப்பு

# தமிழ் அரசியல் கைதி மரணம்!

(பொறளை)

கடந்த 14 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கொழும்பு பொறளை, வனாத்துவில்லு சிறிசரஉயன வீட்டுத் தொகுதியைச் சேர்ந்த முத்தையா சகாதேவன் (வயது-62) என்ற தமிழ் அரசியல் கைதியே இவ்வாறு உயிரிழந்தார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் கடந்த 2005 ஆம் ஆண்டு குறித்த தமிழ் அரசியல் கைதி கைது செய்யப்பட்டிருந்தார்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சிறுநீரகங்கள் செயலிழந்த நிலையில் இரண்டு வாரங்களாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தார்.


இந் நிலையிலேயே அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 125 | 110 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 400 | 360 | 400 |
| தக்காளி | 60 | 80 | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 170 | 160 | 140 | 100 | 120 |
| கோவா | 80 | 80 | 70 | 65 | 80 |
| கரட் | 140 | 160 | 120 | 200 | 200 |
| பூசணி | 120 | 130 | 100 | 100 | 120 |
| புடோல் | 80 | 90 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 160 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 125 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 120 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 110 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 150 | 100 | 60 | 70 | 100 |
| லீக்ஸ் | 180 | 80 | 120 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 70 | 60 | 100 |
| குடைமிளகாய் | 150 | 160 | 110 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 140 | 130 | 200 |
| போஞ்சி | 160 | 180 | 120 | 210 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 60 | 60 | 100 |
| கீரை-1 பிடி | 40 | 25 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 350 | 200 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 150 | 110 | 140 |
| வெங்காயப்பூ | 250 | 200 | — | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | 100 | — | 110 | 80 |

# பாரதம்

## இனியும் குழந்தைகளை பட்டினிக்கு நாம் இரையாக்கக் கூடாது



(பாட்னா)

பீகார் மாநிலத்தின் முசாபர் பூரிலும் மேலும் 11 மாவட்டங்களிலும் மூளை அழற்சி நோய்க்கு நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பலியாகியிருப்பது தேசிய சோகம் மட்டுமல்ல, தேசிய அவமானமும்தான்.

இறந்த குழந்தைகளில் பெரும்பான்மையானவை ஒன்று முதல் பத்து வரையிலான வயதுக்கு உட்பட்டவை. ஊட்டச்சத்துக் குறைவுதான் முக்கியமான காரணம். பெரும்பாலும் இரவுகளில் சாப்பிட ஏதுமில்லாமல் வெறும் வயிற்றுடன் பட்டினியாகவே படுத்துவிடுகின்றனர் இங்குள்ள பெரும்பான்மை குழந்தைகள். காலையில் எழுந்ததும் பசிக்காகவும் ருசிக்காகவும் லிச்சி பழங்களைச் சாப்பிடுகின்றனர்.

அதிலுள்ள இரசாயனம் குழந்தைகளின் உடலில் மிச்சம் மீதியிருக்கும் சர்க்கரைச் சத்துகளை உறிஞ்சிவிடுகிறது. இது உடனடியாக மூளையைப் பாதிக்கிறது. இதனால் மயக்கம், காய்ச்சல், குழப்பம், நினைவிழத்தல் போன்றவை ஏற்படுகின்றன.

உடனடியாக குளுக்கோஸ், டெக்ஸ்ட்ரோஸ் போன்ற சர்க்கரைச் சத்துக் கரைசல்கள் ஏற்றப்பட்டால் குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கலாம். அதைக்கூட செய்ய முடியாத நிலையில்தான் 'மாபெரும் வல்லரசு' கனவு கண்டு கொண்டிருக்கிறோம் நாம்.

பீகார் குழந்தைகள் மரணத்தை வெறும் சுகாதாரப் பிரச்சினையாகப் பார்ப்பது நமக்குத் தீர்வைத் தராது. சமூக, பொருளாதாரப் பிரச்சினையாகவும் பார்க்க வேண்டும்.

ஊட்டச்சத்து குறைவான கர்ப்பிணிகளைக் கவனிப்பதைப் போல மிகவும் வறியவர் வீட்டுக் குழந்தைகளுக்குக் குறைந்தது மூன்று வேளை உணவு கிடைப்பதற்கான பொருளாதாரச் சூழலை, அதற்கான நிதியுதவியை அரசு தரும் ஒரு திட்டத்துக்கான தேவையை இது உணர்த்துகிறது.

மேலும், நம்முடைய சுகாதாரத் துறை அவலட்சணமான தன்னுடைய கட்டமைப்பை மேம்படுத்திக் கொள்ளவும் முனைய வேண்டும்.

"2008 முதல் 2014 வரையில் இந்தியாவில் மூளை அழற்சி நோய்க்கு 44,000 பேர் ஆளாகியிருக்கின்றனர்.

அவர்களில் 6,000 பேர் இறந்துள்ளனர். எஞ்சியவர்கள் டெக்ஸ்ட்ரோஸ், குளுக்கோஸ் அளித்ததால் உயிர் பிழைத்தனர். காய்ச்சல் அறிகுறி தெரிந்த உடனேயே 5வீதம் டெக்ஸ்ட்ரோஸ் ஏற்றினாலே குழந்தைகள் சுதாரித்துவிடும்.

இப்படிபட்ட சூழலில் ஒரு குழந்தைக்கு 10வீதம் டெக்ஸ்ட்ரோஸ் ஏற்றினாலே அபாயக் கட்டத்தை அது தாண்டிவிடும். பாதிக்கப்பட்ட குழந்தைகளை அம்புலன்ஸ்களில் வைத்தியசாலைகளுக்கு அழைத்து வரும் போதே இவற்றைச் செலுத்தி உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்" என்றெல்லாம் இன்று சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் எவ்வளவு மோசமான சூழலில் நம் சுகாதாரத் துறை இருக்கிறது எனும் அவலத்தையே வெளிப்படுத்துகிறது. மத்திய, மாநில சுகாதாரத் துறைகள் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டிய விடயம் இது.

இனி இப்படிப்பட்ட இறப்புகள் நேரக்கூடாது. ஏழைக் குழந்தைகள் மட்டுமல்ல அவர்களுடைய குடும்பத்தவரும் பட்டினியாக இருக்கும் நிலை இனி கூடாது. புதிய அரசின் முன்னுரிமைகளில் இதுவும் ஒன்றாகட்டும்!

- த. ஹிந்து ஆசிரியர் தலையங்கம் -

குடம் இங்கே; தண்ணீர் எங்கே?

## காலிக்குடத்தை கையிலேந்தி ஸ்டாலின் தலைமையில் போராட்டம்



(சென்னை)

குடிநீர் தட்டுப்பாட்டைக் கண்டித்தும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று விமர்சித்தும் தி.மு.கவின் சார்பில் சென்னை, சேப்பாக்கத்தில் ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பருவமழை பொய்த்த நிலையில், தமிழகம் முழுவதும் தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக நிலவுகிறது. குடிநீரை வழங்கிய நீராதாரங்களான ஏரிகள், குளங்கள், கிணறுகளில் பெரும்பாலானவை வற்றிவிட்டன.

இதனால் தலைநகர் சென்னை உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பல இடங்களில் மக்கள் தினமும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். எதிர்க்கட்சியான தி.மு.கவும் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறது. அதே நேரத்தில் மழை வேண்டி அ.தி.மு.க. சார்பில் முக்கிய கோயில்களில் வருண யாகம் நடத்தப்பட்டது.

குடிநீர்த் தேவையைச் சமாளிக்க வெளிமாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து தண்ணீர் கொண்டு வருவது குறித்து தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கிடையே குடிநீர் தட்டுப்பாட்டைக் கண்டித்தும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று விமர்சித்தும் தி.மு.கவின் சார்பில் சென்னை, சேப்பாக்கத்தில் ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. தலைவர் ஸ்டாலினுடன் மத்திய சென்னை தொகுதி எம்.பி. தயாநிதி மாறன், சேப்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏ. ஜெ.அன்பழகன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகளும் ஏராளமான தொண்டர்களும் கலந்துகொண்டனர். பொது மக்களும் கணிசமான அளவில் பங்கேற்றனர்.

இந்நிலையில் காலிக் குடங்களை கையில் ஏந்தி "குடம் இங்கே: தண்ணீர் எங்கே?", "தமிழக அரசே தண்ணீர் கொடு!" என்று கோஷங்களும் எழுப்பப்பட்டன.

அந்த வாசகங்கள் அடங்கிய காலிக் குடங்களுடன் தி.மு.க. நிர்வாகிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (7)

## தமிழக குடிநீர்ப் பிரச்சினை குறித்து பாராளுமன்றில் குரல் எழுப்புவோம்

### திருமாவளவன் திட்டவட்டம்



(திருச்சி)

குடிநீர் பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவோம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்.பி., திருச்சியில் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது,

குடிநீர் தட்டுப்பாட்டை போக்க மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து, அயல் மாநிலங்களில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய நீரை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயத்தில் கேரள முதல்வர் பினராயி விஜயன் உதவத் தயாராக இருக்கிறார். ஆனால் தமிழக அரசு வறட்டு கௌரவம் பார்ப்பது வேதனையளிக்கிறது.

காவிரியில் இருந்தும், கிருஷ்ணாவில் இருந்தும் முறையாக நீர் கிடைக்கவில்லை.

இவற்றை பெற்றால் கூட சென்னை பெருநகரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க முடியும்.

இதற்காக டில்லியில் அழுத்தம் கொடுப்பதற்கு பதில் யாகம் வளர்ப்பது மெத்தனப் போக்கு. தமிழகத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவோம். வரக் கூடிய நாட்களில் சென்னை மட்டுமல்ல, தமிழகமே குடிநீரின்றி தவிக்கும் சூழல் உருவாகும்.


மேற்கு தொடர்ச்சி மலையில் குடிநீரின்றி வனவிலங்குகள் உயிரிழக்கின்றன. இது தேசத்தின் பிரச்சினை என்பதால் மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (7)

## தொடர்கதையாகியுள்ள குழந்தைகள் மரணம் பலி எண்ணிக்கை 167 ஆக உயர்வு!

(பாட்னா)

பீகார் தலைநகர் பாட்னாவில் இருந்து 90 கி.மீ. தொலைவில் முசாபர்பூர் மாவட்டம் உள்ளது. கடந்த 3ஆம் திகதி இந்த மாவட்டத்தில் மூளைக் காய்ச்சலால் 2 குழந்தைகள் உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகின.

அடுத்தடுத்த நாட்களில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தது. பீகார் முதல்வர் நிதிஷ் குமார், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ச வர்தன் உள்ளிட்டோர் சம்பவ பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.



டில்லி எய்ம்ஸ் உள்ளிட்ட வைத்தியசாலைகளில் இருந்து நிபுணர்கள் முசாபர்பூர் மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டனர்.

ஆனால் அதன்பிறகும் மூளைக்காய்ச்சலால் குழந்தைகள் உயிரிழப்பது தொடர்கதையாகி வரு கிறது.

நேற்றைய தினத்துடன் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 167 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து வைத்தியர்கள் கூறிய போது, "ஒவ்வொரு ஆண்டும் கோடைக் காலத்தில் குழந்தை களுக்கு மூளைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்படுகிறது.

முசாபர் நகர் மாவட்டம் மட்டுமன்றி மேலும் 11 மாவட்டங்களில் மூளைக்காய்ச்சல் பாதிப்பு உள்ளது.

இதுகுறித்து விரிவான ஆய்வு செய்யப்பட வேண்டும்" என்று தெரிவித்தனர். (7)

எங்க...
பலவீ...

தாக்குதலை த...
எங்கள் விவேகத்...
பலவீனம் என்று...
டாம் என ஈரான...
வின் தேசிய பாது...
எச்சரிக்கை விடுத்...
ஈரானுடனான...
பந்தத்தை முறித்த...
ரிக்கா, அந்நாட்டு...
போக்கை கடைப்ப...
இதனால் ஈரானு...
மையான பொரு...
ளையும் அமெரிக்க...
ஈரானும் அமெ...
ட்டலுக்கு அஞ்ச ப...

கால்வாய்க்...
பெட்டிகள்...
100 பே...



(டாக்கா)

பங்களாதேஷ...
ணித்த கடுகதி...
கால்வாய்க்குள்...
ந்தனர்.

தலைநகர்...
பகுதியில் உள்...
'உப்பாபன் எக்ஸ...
பயணத்தை ஆர...
நள்ளிரவு 12...
பகுதியை நெரு...
இடத்தில் உள்ள...
வேளை எதிர்பா...
இடிந்து வீழ்ந்த...
நான்கு பெட்டி...
இரண்டு பெட்டி...
பேர் உயிரிழந்த...
காயமடைந்...
மையில் வைத்...
ப்பட்டுள்ளனர்.

# வெளிநாடு

# எங்கள் விவேகத்தை தவறுதலாக பலவீனமாக மதிப்பிட வேண்டாம்

## ஈரானுக்கு அமெ.மீண்டும் எச்சரிக்கை

தாக்குதலை தள்ளிப் போட்டதால் எங்கள் விவேகத்தை தவறுதலாக பலவீனம் என்று மதிப்பிட வேண்டாம் என ஈரானுக்கு அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட அமெரிக்கா, அந்நாட்டுடன் கடும் மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறது. இதனால் ஈரானுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது.

ஈரானும் அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம் என்று பதிலடி கொடுத்து வருகிறது. அண்மையில் ஓமன் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு ஈரானும், அமெரிக்காவும் ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டினர். இதற்கிடையே ஈரானின் தெற்கு பகுதியில் உள்ள ஹோர்மஸ்கான் என்ற பிராந்தியத்திற்குள் வந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் தெரிவித்தது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, உளவு விமானம் சர்வதேச எல்லையில்தான் பறந்தது. அதை வேண்டுமேன்றே ஈரான் அரசு சுட்டு வீழ்த்தியதாக குற்றம் சாட்டியது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானை எச்சரிக்கும் விதமாக தனது டுவிட்டரில் "ஈரான் மிகப் பெரிய தவறு செய்து விட்டது" என பதிவிட்டிருந்தார்.

மேலும், ஈரான் மீது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தாக்குதல் நடத்த உத்தரவிட்டு அதனை கடைசி நிமிடத்தில் கைவிட்டதாக வெளிவந்த செய்தி இரு நாடுகளிடையே போர் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.



எங்கள் நாட்டின் மீது ஒரு தோட்டா பாய்ந்தால் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளுக்கு சொந்தமான உடைமைகள் தீக்கிரையாகும் என ஈரான் நாட்டின் இராணுவ தளபதியின் செய்தி தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் அபோல் பஸல் ஷேகர்ச்சி நேற்று முன்தினம் எச்சரித்தார்.

இதற்கிடையில், ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் திட்டம் தயார் நிலையில் உள்ளது. அது எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்நிலையில், தாக்குதலை தள்ளிப் போட்டதால் எங்கள் விவேகத்தை தவறுதலாக பலவீனமாக மதிப்பிட வேண்டாம் என ஈரானுக்கு அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் பால்ட்டன் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவை சந்திப்பதற்காக ஜெருசலேம்நகருக்கு வந்துள்ள ஜான் பால்ட்டன் "மறுகட்டமைப்பு செய்து புதுப்பிக்கப்பட்டுள்ள எங்கள் இராணுவம் எப்போதும்தாக்குதலுக்கு தயாராகவே உள்ளது' எனவும் ஈரானை எச்சரித்துள்ளார். (7)

# கட்டடம் இடிந்து தரைமட்டம் 25 தொழிலாளர்கள் மரணம்



(பினோம் பென்)

கம்போடியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் கட்டடம் இடிந்து தரைமட்டமான விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.


தென்கிழக்கு ஆசியா கண்டத்தில் அமைந்துள்ள கம்போடியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள பிரபல சுற்றுலா நகரமான சிஹானோக்வில்லி பகுதியில் சீனாவை சேர்ந்த ஒரு நிறுவனம் 7 மாடிகளை கொண்ட புதிய கட்டடத்தை உருவாக்கி வருகிறது.

இந்த கட்டடத்தின் 80 சதவீதப் பணிகள் நிறைவடைந்த நிலையில் கடந்த 22ஆம் திகதி வழக்கம்போல் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென ஒட்டுமொத்த கட்டடமும் சில நொடிகளில் நொருங்கி விழுந்து தரைமட்டமானது.

இடிபாடுகளுக்குள் சிக்கிய சுமார் 50 தொழிலாளர்களை மீட்க தீயணைப்பு படையினர் விரைந்து வந்தனர். 20-க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில் 7 சடலங்கள் இடிபாடுகளில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் முதல் கட்டமாக செய்தி வெளியிட்டன.

இந்நிலையில், காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் சிலர் அடுத்தடுத்து உயிரிழந்ததால் இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. (7)

# கால்வாய்க்குள் விழுந்த ரயில் பெட்டிகள்; ஐவர் உயிரிழப்பு 100 பேர் படுகாயம்



(டாக்கா)

பங்களாதேஷின் வடகிழக்கு பகுதியில் பயணித்த கடுகதி ரயில் ஒன்றின் சில பெட்டிகள் கால்வாய்க்குள் வீழந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் டாக்காவிலிருந்து வடகிழக்கு பகுதியில் உள்ள சில்ஹெட் நகரை நோக்கி 'உப்பாபன் எக்ஸ்பிரஸ் ரயில்' நேற்று முன்தினம் பயணத்தை ஆரம்பித்தது.

நள்ளிரவு 12 மணியளவில் மவுல்விபஜார் பகுதியை நெருங்கிய ரயில் குலாவ்ரா என்ற இடத்தில் உள்ள போரோம்சால் பாலத்தை கடந்த வேளை எதிர்பாராத விதமாக பாலத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் உப்பாபன் கடுகதி ரயிலின் நான்கு பெட்டிகள் தடம்புரண்டன. அவற்றில் இரண்டு பெட்டிகள் கால்வாய்க்குள் வீழ்ந்ததில் 5 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த சுமார் 100 பேர் வரை அண்மையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

# பந்தல் சரிந்து வீழ்ந்ததில் 17 பேர் பரிதாபமாகப் பலி!




ராஜஸ்தான் மாநிலத்தின் பார்மர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பந்தல் சரிந்து வீழ்ந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

ராஜஸ்தான் மாநிலம், பார்மர் மாவட்டத்துக்குட்பட்ட ஜசோல் கிராமத்தில் உள்ள பள்ளியில் நேற்று முன்தினம் ராமாயண கதாகாலச்சேபம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கண்டுகளித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமர்வதற்காக இரும்புக் கம்பிகளைக் கொண்டு மிகப் பெரிய பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், மாலை ஐந்து மணியளவில் பந்தலின் ஒருபகுதி திடீரென்று சரிந்து வீழ்ந்தது. இதில் 17 பேர் உயிரிழந்ததோடு, 20 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்த நிலையில், அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த விபத்தில் உயிரிழந்த 17 பேரின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்தார். (7)

# ஈரான் மீது அமெரிக்கா சைபர் தாக்குதல்!

(வோஷிங்டன்)

ஈரானின் இராணுவக் கட்டமைப்பின் மீது அமெரிக்கா சைபர் தாக்குதல் மேற் கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரொக்கெட் மற்றும் ஏவுகணைகளை கட்டுப்படுத்தும் கணனி கட்டமைப்புகள் மீதே இவ்வாறு சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வோஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல், அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களை சுட்டுவீழ்த்தியது மற்றும் எண்ணெய் குதங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு பதில் நடவடிக்கை என நியூயோர்க் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட அமெரிக்கா, ஈரானுடன் கடும் மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறது. இதனால் ஈரானுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது.

ஈரானும் அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம் என்று பதிலடி கொடுத்து வருகிறது. அண்மையில் ஓமன் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு ஈரானும், அமெரிக்காவும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தியிருந்தனர். இதற்கிடையே ஈரானின் தெற்கு பகுதியிலுள்ள ஹோர்மஸ்கான் என்ற பிராந்தியத்திற்குள் வந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் தெரிவித்தது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, உளவு விமானம் சர்வதேச எல்லையில்தான் பறந்தது. அதை வேண்டுமென்றே ஈரான் சுட்டு வீழ்த்தியதாக குற்றம் சுமத்தியது.

ஈரான் தமது அணுவாயுதங்கள் தொடர்பான திட்டங்களைக் கைவிடும் வரையில் அதன்மீதான பொருளாதார அழுத்தங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# இன, மத விரிசல்களை உண்டாக்கும் அரசியல் முடிவுக்கு வர வேண்டும்

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட வேண்டும் என்பதில் இரண்டுபட்ட கருத்து இருக்க முடியாது. அது அப்பிரதேசத் தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கை.

கிழக்கில் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படும் போது, பிரச்சினைகள் உருவாகும் போது பாரபட்சமாக தீர்வு காணப்பட்டன என்ற மனக்குறை தமிழ் மக்களுக்கு இருக்கிறது.

ஆனால்இன, மதவாத நோக்கு நிலையில் இருந்து இப்பிரச்சினையை அணுக முடியாது. அரச நிர்வாக யந்திரம் இலங்கையின் சகல சமூகங்களும் இலகுவாக மனத்தடையில்லாமல் அணுகக் கூடியதாக இருக்க வேண்டும்.

அம்பாறை மாவட்ட செயலகமும் சரி கல்முனை பிரதேச செயலகமும் சரி தமிழ் மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு இசைவானவையாக இல்லை என்பது உண்மையான நிலையே. எப்போதோ இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும் என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி தெரிவித்தது.

வரலாற்று வழிப்பட்டு திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமே தமிழ் மக்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. இலங்கையின் தமிழ், முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

நாடு முழுவதும் இன,மத வெறுப்பு அரசியல் தலை தூக்கியுள்ளது. இந்த நாட்டின் எதிர்காலம் பற்றிய கேள்வியை உருவாக்கியுள்ளது. கிழக்கு, வடக்கை பிரிப்பதில் முனைப்புடன் செயற்பட்ட அதேவிதமான இன, மதவாத சக்திகள் மீண்டும் விளையாட்டை ஆரம்பித்துள்ளன. இலங்கையை பல்லினங்களின் நாடாக மாற்றுவதிலேயே இலங்கையின் எதிர்காலம் வெற்றிகரமாக அமையும்.

எத்தகைய அதி தீவிரவாத நிலைப்பாடுகளும்இன,மத ரீதியான விரிசல்களையே ஏற்படுத்தும்.

நாடு முழுவதும் உருவாகியுள்ள வெறுக்கத்தக்க இன,மதவாத தீப்பொறிகள் கொழுந்து விட்டெரியாமல் தணிக்கப்பட வேண்டும். அதி தீவிர இன,மதவாத சக்திகளுக்கு இடமளிக்கப் படக்கூடாது.

நிலைமையின் பாரதூரத் தன்மையை விளங்கிக்கொண்டு அரசாங்கமும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிங்கள,தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளும் தாமதியாமல் பிரச்சினைக்கு ஒருங்கிணைந்து தீர்வு காண வேண்டிய பொறுப்பும் கடமையும் உள்ளது. இந்த நாட்டு மக்கள் பற்றிய சமூகப் பிரக்ஞை, பொறுப்புணர்ச்சி இருந்தால் இது பெருங்காரியமல்ல.

தமிழ் பேசும் சமூகங்கள் என்ற ரீதியில் முஸ்லிம், தமிழ் தலைவர்கள் மனம் திறந்து பேச வேண்டும். தமிழ் மக்களின் நீண்டகால நியாயமான தனிப் பிரதேச செயலக கோரிக்கைக்கு ஆதரவு வழங்க முஸ்லிம் மக்களின் தலைவர்கள் முன்வர வேண்டும்.

தொல் பொருள் திணைக்களத்திற்கு அல்லது வன பரிபாலனத் திணைக்களத்திற்குச் சொந்தமானதென கிழக்கு, வடக்கில் சுவீகரிக்கப்படும் காணிகள் இதர ஆதனங்களை பௌத்த மத குருமார்கள் இஷ்டம் போல் பயன்படுத்தலாம் என்பது இலங்கையில் எழுதப்படாத விதியாக உள்ளது. இது பாரதூரமான அதிகார துஷ்பிரயோகமாகும்.

திருமலை கன்னியா தென்னமரவாடி, முல்லைத்தீவு செம்மலை போன்ற பல இடங்களில் பாரம்பரியமான தமிழர்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. கன்னியாவில், செம்மலையில் பிள்ளையார் கோவில்கள் இருந்த இடங்கள் பேரின, மதவாத ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றன.

வன பரிபாலனம், தொல்பொருளியல் காணி நிர்வாக யந்திரம், பேரின மதவாத நிர்வாக யந்திரம் என்பதிலிருந்து சுயாதீனமாக்கப்பட வேண்டும்.

இன்று நேற்றல்ல. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இவை இவ்வாறு தான் இயங்குகின்றன. 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் காணி அதிகாரம் மாகாணத்திற்குரியதாக இருப்பினும் அது உதாசீனம் செய்யப்படுவது பேரினவாத, மதவாத நோக்கு நிலையில் இருந்தே.

திருமலையைப் பொறுத்தவரை அங்கு மாவட்ட செயலாளர் அல்லது காணி அதிகாரி அல்லது ஆளுநர் நியமனங்கள் அநேக சந்தர்ப்பங்களில் பேரின, மதவாத நோக்கு நிலையில் இருந்தே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அகங்கார மன நிலையில் இருந்து இலங்கையின் அரசியல் அதிகார நிர்வாக யந்திரம் விடுவிக்கப்பட வேண்டும்.

இலங்கை பல்லினங்களின் பல சமயங்களின் நாடு என்பது உறுதி செய்யப்பட வேண்டும். இலங்கையின் நல்லெதிர்காலம் தலைவிதி இந்த அடித்தளத்தில் தான் தங்கியிருக்கிறது என அக் கட்சியின் தலைவர் ரி.சிறிதரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டில் அறிவியல்பூர்வமான அபிவிருத்திகள் இல்லை-சம்பிக்க

(கிரிபத்கொட)

கடந்த காலங்களில் நாட்டில் அறிவியல்பூர்வமான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது.

கிரிபத்கொடயில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.



'நாட்டில் அறிவியல் பூர்வமானஅபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதற்கு சிறந்த உதாரணம் அம்பாந்தோட்டையாகும்.

அரசியல் இலாபங்களுக்காக துறைமுகம், விமான நிலையம், நெடுஞ்சாலைகளை அமைத்துச் சென்றது கடந்த அரசாங்கம். அதேபோல் இந்த அரசாங்கமும் அதிக முதலீடுகளை செய்து அபிவிருத்தி செய்தது குறித்த பிரதேசத்துக்கே என்றாலும் அங்கு தான் மந்தபோசனையால் குழந்தைகள் உயிரிழக்கின்றன.

2005 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் அதிக முதலீடுகள் இடம்பெறுவது அம்பாந்தோட்டையிலேயே' என சம்பிக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# அம்பாறை - சாய்ந்தமருது பகுதியில் அதிரடிப்படையினர் திடீர் சுற்றிவளைப்பு!

அம்பாறை - சாய்ந்தமருது பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது சுங்கத் தீர்வையின்றி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பாரியளவிலான சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த தேடுதல் வேட்டை கல்முனை சாய்ந்தமருது சந்தைக்கு அருகாமை நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதி. ஒரு பெரிய கூட்டம். யேசுநாதர் பேசிக்கொண்டிருக்கிறார். அப்போது பிரமாண்டமான துலாக் கோல் ஒன்றை அந்த மக்களுக்குக் காட்டுகிறார்.

அது மாதிரி ஒரு தராசை அந்த மக்கள் முன்னர், பின்னர் பார்த்ததில்லை. அவ்வளவு பெரிய தராசு. இந்த உலகத்திலே உள்ள எல்லாவற்றையும் அந்த தராசிலே வைத்து எடை போடுகின்றார் அவர்.

அந்தப் பெரிய தராசு ஆகாயத்தில் இருந்து தொங்க விட்டது போன்று இருக்கின்றது. அந்தத் தராசிலே ஒரு பக்கத்தட்டிலே அந்த யூதேயா மலைப்பகுதியிலே கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் எடுத்து வைக்கின்றார்.

மலைச்சாரலில் வளர்ந்திருக்கின்ற ஒலிவ் மரங்களையெல்லாம் எடுத்து அதில் வைக்கின்றார்.

மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆட்டு மந்தைகளையெல்லாம் அதிலே தூக்கி வைக்கின்றார்.

அதுவரைக்கும் தோண்டி எடுக்கப்பட்ட தங்கத்தையெல்லாம் அங்கே வைக்கின்றார். இவ்வளவும் இடது பக்கத் தட்டிலே வைக்கின்றார். மக்களெல்லாம் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்னொரு தட்டிலே வைப்பதற்கு மீதி எதுவுமே இல்லையே என்று அவர்கள் எல்லாம் ஒருத்தருக்கொருத்தர் பேசிக் கொண்டார்கள்.

உலகத்திலே உள்ள எல்லாவற்றையும் ஒரு பக்கத் தட்டிலே வைத்தார். அவ்வளவையும் ஈடுகட்டுகின்ற அளவிற்கு அடுத்த பக்கத்துத் தட்டிலே எதை வைக்க முடியும்?

எல்லோரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இயேசு நாதர் சுற்றும் முற்றும் பார்க்கின்றார்.

அங்கே பக்கத்திலே இருந்த ஒரு சின்னக் குழந்தையை தூக்கி வலது பக்கத் தட்டிலே வைக்கின்றார் அவ்வளவு தான்.

இடது பக்கத் தட்டு ஆட ஆரம்பித்து விட்டது. மெதுவாக மேலே போக ஆரம்பித்து விட்டது. மிகவும் உயரத்திற்கு போய் விட்டது. அதிலே இருந்த பொருட்கள் எல்லாம் கீழே விழுந்து விடுமோ என்று நினைக்கின்ற அளவிற்கு ஆகிவிட்டது.

எல்லோரும் ஒன்றும் புரியாமல் இயேசு பெருமான் முகத்தைப் பார்க்கின்றார்கள். அவர் சொல்கின்றார்.

ஒருவன் தன் ஆன்மாவுக்கு கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதானால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்? என்றார்.

இந்த சம்பவத்திலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன? இந்த உலகத்திலே இருக்கின்ற எல்லாவற்றையும் விட அதிக விலையுடையது எது என்று கேட்டால் அது மனிதனின் ஆன்மா தான் என்பதை இந்தச் சம்பவம் மூலமாக அவர் மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

இன்றைக்கு நாம் படுகின்ற கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னமும் முழுதாகப் புரிந்து கொள்ளவில்லை. அதுதான் காரணம். இப்பெல்லாம் உலகத்திலே அங்கே இங்கே நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால் மனித உயிர் மிகவும் மலிவாகப் போய்விட்டதே என்கின்ற நினைப்புத்தான் வருகின்றது.

அண்மையில் பத்திரிகையிலே ஒரு நகைச்சுவை துணுக்கு பார்த்தேன். ஒரு ராஜா காட்டிற்கு வேட்டைக்குப் போய் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது கூட வந்து கொண்டிருந்தவர்களிடம் விசாரிக்கின்றார்.

"அமைச்சர் இருக்கிறாரா? என்கிறார்" ராஜா.

"இதோ இருக்கேன் !" என்கிறார் அமைச்சர்.

"சேவகர் இருக்கிறாரா?" என்கிறார்.

"இதோ இருக்கேன்!" என்கிறார் அவர்.

"தளபதி இருக்கிறாரா?" என்கிறார் .

"இருக்கேன்!"என்கிறார் தளபதி.

"அப்பாடா! அப்படி என்றால் நான் சுட்டது கரடியைத் தான்!" என்றார் ராஜா.

மனிதன் உயிர் மேலே மன்னருக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

282


சிறிமாவோ பண்டாரநாயக்க


Felix Dias Bandaranaike

மேற்படி நூல்கள் அடிப்படையில் ஆய்வையும் துறைசார் புலமையையும் கொண்டவையாக இருக்கவில்லை. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் ஆறுமுகநாவலரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தமிழ் இலக்கிய விழிப்புணர்வை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுந்த மேற்படி வரலாற்று நூல்கள் இரண்டு, மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்து தக்கவைத்திருந்தன.

பின்னர் 1940களிலிருந்து 1970கள் வரையில் வெளிவந்த மேற்கூறப்பட்ட நூல்கள் தமிழரின் தேசியவாத உணர்வுக்கு உந்துசக்தியாக இருந்தது. தமிழ்த் தேசியவாத எழுச்சிக்குப் பெரும் பங்காற்றின என்று கூறுவது பொருத்தமானதாகும்.

தமிழர் அரசியல் 1970 இல் புதியதொரு சகாப்தத்தைத் தரிசித்தது. திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாக்சிஸ்ட் கட்சிகளின் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சியை 1970 தேர்தலில் மோசமான தோல்வியைத் தழுவ வைத்தது.

திருமதி பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி வகித்த ஐக்கிய முன்னணி அரசில் ஒரு சிரேஷ்ட அமைச்சராக இருந்த அரசியலில் நடைமுறை அனுபவம் அற்ற அவரது மருமகன் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தமிழரின் பிரச்சினைகளையிட்டு உணர்வற்றவராக இருந்தார்.

இவர்கள் இருவருமே தமிழ்த் தேசியவாதம் வலுவடைய அவர்களை அறியாமலே உதவிய ஆரம்ப கர்த்தாக்கள் ஆவர்.

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

சிறீமாவோ- மார்க்சிஸ்ட் ஐக்கிய முன்னணிக்குத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு தேவைப்படாத நிலையில் அதனால் 1972 இல் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு தமிழரசுக் கட்சியின் பிரதான இலட்சியமான தமிழ்ப் பிரதேசங்களுக்கான சுயாட்சியை அடைவதற்கான முயற்சிகளுக்குத் தடையாய் இருந்தமையால் தமிழரசுக் கட்சியினர் விரக்தியடைந்திருந்தனர்.

மேலும் இந்தப் புதிய அரசியலமைப்பு தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே நிலவிய இனப்பகைமையை மேலும் தீவிரமாக்கியது.

புதிய அரசியலமைப்பானது சிங்கள மொழியை மட்டுமே உத்தியோக கருமமொழியாக பிரகடனப்படுத்தியதுடன் பெரும்பான்மை சிங்கள மக்களின் புத்த சமயத்திற்கு அரசியலமைப்பில் விசேட அந்தஸ்தையும் வழங்கியிருந்தது.

மேலும் அது பாராளுமன்றத்தின் இரண்டாவது அவையான மூதவையையும் இல்லாமல் ஒழித்தது.

சிறுபான்மையினருக்குப் பாதகமான சட்டமூலங்களைப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர் நிறைவேற்றுவதைத் தடுப்பதற்காகவே மூதவை ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

போதியளவு பிரதிநிதித்துவம் இல்லாத பிரிவினர் மத்தியிலிருந்து பிரதிநிதிகள் நியமிக்கப்படும் முறைமையையும் இந்த 1972 ஆம் ஆண்டுப் புதிய அரசியலமைப்பு இல்லாமற் செய்தது.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைப்பது போல், சோல்பரி ஆணைக்குழுவினரால், சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்திய 29(2) பிரிவுச் சட்டஷரத்து அரசியமைப்பிலிருந்து அகற்றப்பட்டது. இதற்குப் பதிலாக அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) என்ற ஷரத்து அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரதிநிதிகள் சபையால் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட போது, அச் சபையின் கருமங்களில் பங்கு பற்றாது, தமிழரசுக் கட்சி அதனைப் புறக்கணித்தது.

தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி, அவர்களை புதிய அரசியலமைப்பிலிருந்து பாதுகாப்பதற்காக தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஏனைய தமிழர் அமைப்புக்களும் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அரசியல் கட்சியை 1972 இல் உருவாக்கினார்.

இந்த கட்சியின் பெயர் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றப்பட்டது. இந்த மாற்றம் பெயரில் மாத்திரமின்றி இக் கட்சியின் கொள்கைகளை பிரசித்தப்படுத்தும் வகையில் அமைந்தது. அதாவது சுயாட்சிக் கொள்கையிலிருந்து இப்பொழுது தனிநாட்டுக் கோரிக்கைக்கு அதன் கொள்கைகள் மாறியிருந்தன என்பதாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர், ஐக்கிய முன்னணியை அதன் அரசியலமைப்பில், தமிழரின் நியாயமான கோரிக்கைகளை உள்ளடக்குமாறு கேட்டுக்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், முதன்முதலாக, தமிழருக்கெனத் தனியான சுதந்திர நாடு ஒன்றை உருவாக்குவதையிட்டுப் பேச ஆரம்பித்தனர்.

ஏற்கனவே விளக்கியபடி, சோல்பரி ஆணைக்குழுவினர் எதிர்பார்த்ததற்கு இணங்க சிங்களப் பெரும்பான்மை அரசு, தமிழ்ச் சிறுபான்மையினரின் எந்த உரிமையையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

இதற்கு எதிர்மாறாக இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறித்ததன் மூலம் தமிழரின் ஏழு பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களை இல்லாதொழித்து அவர்களின் மொழி அந்தஸ்தும், மொழி உரிமையும் நிச்சயமற்ற ஒரு நிலைமைக்கு கொண்டு செல்லப்பட்டன.

சிங்களப் பெரும்பான்மையினரின் புத்த சமயத்திற்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ விசேட அந்தஸ்து தமிழரின் சைவ சமயத்திற்கு மறுக்கப்பட்டது.

தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, தமிழரின் வாழும் உரிமையைப் பறித்ததோடு, தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைக்கக் கூடிய வாக்குப் பலத்தையும் குறைத்தது.

மேலும் தமிழ்ப் பிரதேச எல்லைகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் புதிய சிங்களத் தேர்தல் தொகுதிகளை உருவாக்கியது. இதற்கு சிறந்த உதாரணம் கிழக்கில் உள்ள அம்பாறைத் தேர்தல் தொகுதியாகும்.

(தொடரும்)

# போருக்கு பிந்திய சூழலில் எமது சமூகம் எதிர்கொள்ளும் பண்பாட்டு நெருக்கடிகள்

போரின் போது வன்முறைச் சூழலில் சொல்ல முடியாத உயிரிழப்புக்கள், பொருள் இழப்புக்களைச் சந்தித்த எமது சமூகத்தில் போர் முடிவுக்கு வந்த பின்னரும் அதன் தொடர் விளைவாக இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் வன்முறைகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வட பகுதி சிறார்களில் 57 வீதமானோர் ஒழுங்கீனமான நடத்தையுள்ளவர்களாக உள்ளனர். 29 வீதமானோர் முழுமையான நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வன்னிப் பிரதேசத்திலுள்ள சிறுவர்களில் 80 வீதமானோர் ஆயுத மோதலில் இறந்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் 2007 தொடக்கம் 2014 வரையான காலத்தில் 32 வீதத்திலிருந்து 99 வீதமாக அதிகரித்துள்ளது. மேற்படி பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் ஆய்வுகளிலிருந்து எமது சிறார்களின் நிலைமையைப் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறான போருக்குப் பிந்திய சூழலில் எமது சமூகம் எதிர்கொள்ளும் பண்பாட்டு நெருக்கடிகளுக்கான காரண-காரியங்கள் என்ன? இவற்றைக் குறைப்பதற்கு கிராமம், பிரதேசம் என்றவாறு எவ்வகையான செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தலாம். ஏன்? செயற்றிட்டங்கள் தோல்வியடைகின்றன என்பது ஆய்வுக்குரியது. சமூகத்தில் நிலவும் வறுமை, வேலை வாய்ப்பின்மை, பொருட்களின் விலை அதிகரிப்பு, நுகர்வுப் பொருளாதாரம், சமூக குடும்ப ஒழுக்கப் பிறழ்வுகள், கலாசாரப் பிறழ்வுகள் என்பனவே பிரதான காரணங்களாகும்.

கலாசாரம் அல்லது பண்பாட்டை புகழ் பெற்ற சிந்தனையாளர் ஆக்பர்ன் இரண்டாகப் பிரிக்கின்றார்.

1. பொருள்சாராக் கலாசாரம்

2. பொருள் சார் கலாசாரம்

பொருள்சாரா கலாசாரம் என்பது சமூகம் கொண்டுள்ள அறிவு, சட்டம், அறிவியல், ஒழுக்கம், சமயம், தத்துவம் என்றவாறான சிந்தனை, நடத்தைகளைக் குறிக்கும். பொருள்சார் கலாசாரம் என்பது தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரம் என்பவற்றைக் குறிக்கும். எமது பிரதேச மக்களுடைய மத நம்பிக்கை, வழிபாட்டு முறைகள், தேச வழமைச் சட்டம், குடும்ப முறைகள், பாரம்பரியமான ஒழுக்க நியமங்கள், பாரம்பரிய கல்வி, அழகியல் செயற்பாடுகள் என்பன பொருள்சாரா கலாசாரமாகவுள்ளன. கணனி, கைத்தொலைபேசி, இணையம், தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு நுகர்வுப் பொருள்கள், ஆய்வு கூடங்கள் என்பன பொருள்சார் கலாசாரமாகும். இவ்விரண்டிற்கும் இடையே காணப்படும் இடைவெளியே கலாசார தேக்க நிலையாகும். இதனால் இரண்டிற்கும் இடையில் உரசல், மோதல் ஏற்பட்டு இடைவெளி குறைவடையும். இதன் மூலம் சமநிலை ஏற்பட்டு புதிய கலாசாரம் உருவாக்கப்படுகின்றது. இது ஓர் ஆய்வு முறையாகக் கொள்ளப்படுகின்றது.

போர்ச் சூழலின் போது ஓர் மூடிய சமூக, பண்பாட்டுக் கட்டமைப்பே காணப்பட்டது. போர் முடிந்த 2009 ஆம் ஆண்டின் பின்னர் பிரதான வீதிகள் யாவும் காப்பெற் நெடுஞ்சாலைகளாக மாறின. புகையிரதப் பாதைகள் யாவும் புனரமைக்கப்பட்டன. இவ்வாறாக போக்குவரத்து உட்கட்டமைப்புக்கள் மாற்றம் பெற்றன. இதனால் தென்னிலங்கையின் நுகர்வுப் பொருட்கள் எமது சந்தைகளை ஆக்கிரமித்தன. அரச, தனியார் வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் அனைத்தும் எமது பிரதேசத்தின் மூலை முடுக்கெல்லாம் கிளைகளை அமைத்தன. இவை யாவும் மக்களின் சேமிப்பை அதிகரித்ததோடு நுண்நிதிக் கடன்களையும் வழங்கின. இந்நிதிச் சந்தை எமது மக்களின் பண்பாட்டில் அதிர்வுகளை ஏற்படுத்தின. அத்தோடு அளவு கடந்த மதுபானச் சாலைகள் மற்றும் போதைவஸ்துக்களின் கூடாரமாக எமது பிரதேசம் மாறியது. நாட்டிற்கு மதுபானத்தால் கூடுதலான வருமானத்தைத் தருகின்ற மாகாணமாக வடக்கு மாறியது.




மதுபானம் மற்றும் போதைவஸ்துக்கள் கொள்ளைகள், கொலைகள், வன்புணர்வுகள், வாள்வெட்டுக்கள் போன்ற தீய செயல்களுக்கு காரணமாகின.

போருக்கு பிந்திய பத்து ஆண்டுகளில் பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அதிகரித்துள்ளன. பாடசாலைகள் பிள்ளை நேயப் பாடசாலைகள் ஆவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாடசாலைகளுக்கான தரமான உள்ளீடுகள் அதிகரிக்கப்பட்டன. ஆனால் வெளியீடுகளோ எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்கவில்லை. இதற்கான காரணங்களாக வெளிநாட்டு மோகம், வெளிநாட்டுப் பணம், விழாக்கள், பாராட்டுக்கள் அதிகரிப்பு, படிப்பதில் ஊக்கமின்மை, நாட்டமின்மை, திருமணத்திற்காக பெண் ஆசிரியர்களின் புலம்பெயர்வு என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறாக தொடர்ந்து மாணவர்களின், இளைஞர்களின், யுவதிகளின் கல்வித் தரம் வீழ்ச்சி அடையுமாயின் அது பாரிய பண்பாட்டு நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

எமதுபிரதேசங்களில்ஆலயங்கள் யாவும் புனரமைக்கப்பட்டு ஏட்டிக்குப் போட்டியாக கோபுரங்கள் வானளாவ உயரும் அளவுக்கு மனித மாண்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது போதுமானதாக இருப்பதில்லை. எனவே ஆலயங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் சைவ நாற்பாதங்களில் அடிப்படைப் பயிற்சிகளை வழங்கும் இடங்களாகமாற்றம் பெற வேண்டும். போரினால் ஏறத்தாழ 44,000 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகியுள்ளன. இவர்களின் வாழ்வாதாரத்திற்கு கரம்கொடுப்பதாக இராணுவ அமைப்புக்கள், நுண்கடன் நிதி நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் உதவ முன்வருகின்ற போதும் அவை அவர்கள் மீது பலவாறான பண்பாட்டு அச்சுறுத்தல்களை விடுக்கின்றன.

தேசிய இனம் என்ற வகையில் சுயாட்சிக்காகப் போராடிய எமது சமூகம் தனது நிலம், மொழி, பொருளாதாரம், பண்பாடு என்ற நான்கு அம்சங்களிலும் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றது. இந்த நான்கு அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவை. நிலம் இல்லாமல் எமது சமூகத்தின் இருப்போ அதன் பண்பாடோ சாத்தியமில்லை. போருக்குப் பிந்திய சூழலில் வடக்கில் நியாயமான வளமான வாழ்விடங்கள் இராணுவத்தின் பாவனையில் உள்ளன. அவற்றை மீட்பதற்காக மக்கள் இன்றுவரை போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அடுத்து சில அரச திணைக்களங்களும் எமது சமூகத்தின் பண்பாட்டு நெருக்கடிகளுக்கு காரணமாகின்றன. குறிப்பாக போருக்கு பிந்திய சூழலில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பல எண்ணிக்கையான புத்த கோவில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது வருங்காலத்தில் இந்து மக்கள் எதிர்நோக்கும் பண்பாட்டு ரீதியான பிரச்சினையாகும். போர்க் காலத்தில் அழிவுகள் மத்தியில் இந் நான்கையும் பேணுவதில் விடுதலை அமைப்பு அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்கின. சிறப்பாக அக்காலத்தில் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டு சமூகத்தில் பண்பாட்டுக் கூறுகள் பேணப்பட்டன என இன்றைய ஜனநாயகச் சூழலில் எமது பண்பாட்டு நெருக்கடிகளுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு இனத்தலைமுறையினரதும், தலைவர்களினதும் பொறுப்பாகும்.

போர்க்காலத்தில் பொருள்சார் கலாசாரமாக இராணுவ விஞ்ஞானம், இராணுவப் பண்பாடு பிரதான இடத்தைப் பெற்றது. இதனால் எமது சமூகத்தின் பாரம்பரிய பொருள்சாரா கலாசாரத்திற்கும், இராணுவக் கலாசாரத்திற்கும் இடையே முரண்பாடுகள், மோதல்கள் ஏற்பட்டதுண்டு. போர் முடிவுக்கு வந்த கையோடு எல்லாமே நிர்மூலமாகின. போருக்கு பிந்திய சூழலில் தகவல் தொழில்நுட்ப கலாசாரம், உள்நாட்டு வெளிநாட்டு நுகர்வு கலாசாரம், கையடக்கத் தொலைபேசிக் கலாசாரம் ஆகிய பொருள் சார் கலாசாரத்திற்கும், அறிவு, சட்டம், மத நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், ஒழுக்க நியமங்கள், விழுமியங்கள், அழகியற் செயற்பாடுகள், தத்துவம் எனப்படும் பொருள்சாரா கலாசாரத்திற்கும் இடையே முரண்பாடுகள், மோதல்கள், உரசல்கள் ஏற்படுகின்றன. இவையே எமது சமூகத்தில் பண்பாட்டு நெருக்கடிகளாக வெளித் தெரிகின்றன. இவ் இரண்டிற்கும் இடையேயான தேக்க நிலை கலாசாரத்திற்கு இன்னுமொரு காரணத்தையும் குறிப்பிடலாம். அதாவது பார்வைக்கு நாம் நவீனமானவர்களாகவே தென்படுகின்றோம். நவீன ஆடைகளை அணிகின்றோம். நவீன தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துகின்றோம். அதனை எவ்வாறு ஒழுங்குபடுத்துகின்றோம் என்பதிலுள்ள உள்ளடக்கம், உணர்வு என்பதில் நாங்கள் நிலப் பிரபுத்துவ மானவர்களாகவே எம்மைக் கருதுகின்றோம்.

1978 இல் புதிய அரசியல் யாப்பை கொண்டு வந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தினார். அதே காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்று வளரத் தொடங்கின. இதனை புணர்ந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன வேலை வாய்ப்பின்றி இருந்த இளைஞர்களை திறந்த விசாவில் வெளிநாடுகளுக்கு அனுப்பினார். 1983 ஜூலை கலவரத்தையடுத்து தென்னிலங்கையில் திறந்த பொருளாதாரமும், வடக்கு-கிழக்கில் இயக்கங்களின் கட்டுப்பாட்டில் மூடிய பொருளாதாரமும் தோற்றம் பெற்றது.

2009 மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஊழலான திறந்த சந்தைப் பொருளாதார முறைமை எமது சமூகத்தை ஆக்கிரமித்தது. பாதாள உலகமும் கடுமையான போதைப்பொருள் வர்த்தகமும் இதனொரு அங்கமாகவே உள்ளது. அத்துடன் அதன் முழுமையில் ஒரு சிறிய பகுதி மட்டுமே பார்வைக்கு தென்படுகின்றது. இந்தப் பாரியளவான தரங்குறைந்த குப்பைக் கிடங்கிற்குள் எமது அறநெறிகள், தார்மீக நெறிகள், பண்பாடுகள் யாவும் அடித்துச் செல்லப்படுகின்றன.

பண்பாடு என்பது மாறாத ஒன்றல்ல. அது மெல்ல, மெல்ல மாறும் தன்மை கொண்டது. சமுதாயக் கட்டமைப்பு மாறும் போது அதற்கேயுரித்தான புதிய பண்பாடும் தோற்றம் பெறுகின்றது. மானிட சமுதாயம் உற்பத்தி சக்தி, உற்பத்தி உறவு என்பவற்றிற்கு ஏற்ப அடிமைச் சமுதாயம், நிலமானிய சமுதாயம், முதலாளித்துவம், சோசலிசம் என மாற்றம் அடைய அவற்றுக்கான பண்பாடுகளும் உருவாக்கப்படுகின்றன. இன்று நாம் வாழ்கின்ற அறிவு சார் பொருளாதார யுகத்தில் விவசாயம், கைத்தொழில் சார் பாரம்பரிய பண்பாடுகளுடன் புதிய மனிதநேயப் பண்பாடுகளை வளர்க்கும் வகையில் ஜனநாயக வழியில் நல்ல அறிவு சமுதாயத்தை படைக்கும் பொறுப்பு எம் அனைவரையும் சார்ந்ததாகும்.

போருக்குப் பின்னர் அரசியல் கட்சிகள் கலை, இலக்கிய, பண்பாட்டு விடயங்களில் போதிய அக்கறை செலுத்தவில்லை. ஆனால் சமூகத்தில் அரசியல், சமூக, பண்பாட்டு நெருக்கடிகள் தலை விரித்தாடின. இந்நிலையில் தேசிய, கலை இலக்கியப் பேரவை, தமிழ்ச் சங்கங்கள், இலக்கிய மன்றங்கள், நடன, நாடகத்துறைசார்ந்த அமைப்புக்கள் என்பன சமூகத்திற்கு தலைமை தாங்கும் வகையில் பண்பாட்டு, அறநெறி, நீதி நெறிக் கருத்துக்களை பிரசாரம் செய்வது பாராட்டிற்குரியது. எமது சமூகத்தை வரலாற்று ரீதியாக போருக்கு முந்திய போர், போருக்குப் பிந்திய என மூன்று கால கட்டங்களாக பிரிக்கலாம். இதனால் சமூகம் பல மாற்றங்களுக்கு உட்பட்டே வந்திருக்கின்றது. இடம் பெயர்ந்த, புலம்பெயர்ந்த மக்கள் தம் அனுபவத்தில் பல் கலாசாரம், பல்வகைமை என்னும் எண்ணக்கருக்களை ஓரளவேனும் புரிந்து கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் எமது சமூகத்தில் மத மாற்றங்கள், மதமுரண்பாடுகள், ஏட்டிக்குப் போட்டியாக சிலைகளை, சுருவங்களை வைத்தல், அவற்றை உடைத்தல் என்றவாறான போக்குகள் மதங்களுக்கு இடையேயான புரிந்துணர்வு இன்மையை எடுத்துக் காட்டுகின்றது. எனவே எமது சமூகத்திற்குள்ளே தேசிய ரீதியாக ஒவ்வொருவரும் பல் கலாசாரம், பல்வகைமை என்பதைப் புரிந்து கொள்ளாத வரை, சமூக மாற்றம் ஒன்று ஏற்படாத வரை பண்பாட்டு நெருக்கடிகள் என்பவை தொடரவே செய்யும்.

இன்றைய பண்பாட்டு நெருக்கடிகளுக்கு அகநிலைக்காரணங்களும் புறநிலைக் காரணங்களும் உண்டு. இரண்டாம் உலகப்போரினால் பாதிப்படைந்த ஜப்பானை கட்டியெழுப்புவதற்கு பல நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர்கள் ஆலோசனைகள் வழிகாட்டல் செய்தார்கள். இதனால் ஜப்பான் போருக்குப் பின்னால் புதிய பொருளாதாரம், முகாமைத்துவம், தொழில்நுட்பம், பண்பாட்டுடன் எழுச்சியடைந்த நாடாக மாறியது. புரட்சிகள், போராட்டங்கள் வெற்றியடைந்தாலும் தோல்வியடைந்தாலும் பண்பாட்டு நெருக்கடிகள் ஏற்படுவதும் பின்னால் அவை தீர்க்கப்படுவதும் உலக வரலாறாகும். 1917 ரஷ்யாவில் ஏற்பட்ட ஒக்டோபர் புரட்சியினால் அங்கு பண்பாட்டு நெருக்கடிகள் ஏற்பட்டன. ஆனால் பின்னாளில் புதிய பொருளாதாரக் கொள்கையுடன் புதிய சோசலிச பண்பாட்டு உருவாக்கமும் ஏற்பட்டது. 1913 இல் நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் சோவியத் நாடு சென்று அப்புதிய சமுதாயத்தை தரிசித்தார்.

1933 களில் ஓர் அறிஞர் "சோவியத் ஒன்றியத்தில் புதிய நாகரிகம்" என்னும் நூலையே எழுதினார். இவ்வாறே சீனா ஆசியாவிலே மிகப் பாரம்பரியமான பண்பாட்டைக் கொண்ட நாடாகும். அங்கு மூன்று தசாப்த இடையறாத புரட்சிப் போராட்டத்தின் மூலம் 1949 இல் புதிய ஜனநாயகப்புரட்சி ஏற்பட்டது. அந்நாடு பௌத்தம், கன்பூசியஸ், டயோ(T:30) போன்றவர்களின் தத்துவ ஒழுக்க நெறிகளைக் கொண்டதாகும். அவை சோசலிசப் பண்பாட்டு உருவாக்கத்திற்கு உதவின.

"நூறு பூக்கள் மலரட்டும், நூறு சிந்தனைகள் முட்டி மோதட்டும்" என்பது நாட்டின் சோசலிச கலாசாரத்தை துரிதப்படுத்துவதற்குரிய கொள்கையாகும். இருந்தும் இரு தசாப்தங்களில் பாரம்பரிய உடைமைசார் பண்பாடுகளுக்கும் சோசலிச பண்பாடுகளுக்கும் இடையே முரண்பாடுகள், மோதல்கள் ஏற்படத்தொடங்கின. இதுவே பின்னர் கலாசாரப்புரட்சியாக வெடித்து 1968 இல் செஞ்சீனாவை உலுக்கியது. எமது சமூகத்திலும் எதிர்கால அரசியல், சமூக, பண்பாட்டு இயக்கங்கள் வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்று நெருக்கடிகளைத் தீர்ப்பது வரலாற்று நியதியாகும்.

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்

# இலங்கையுடன் இந்தியா என்றும் தொடர்ந்திருக்கும் இந்தியத் தூதுவர் தரண்ஜித் சந்து திட்டவட்டம்






(அம்பாறை)

அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு விசேட வைபவத்தில் அவசரகால நோயாளர் அம்புலன்ஸ் சேவை கிழக்கு மாகாணத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயா கமகே, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனோமா கமகே, இந்திய உயர் ஸ்தானிகர், தரண்ஜித் ஜித் சிங் சந்து மற்றும் ஏனைய பிரமுகர்கள் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வாரம்பித்தலுடன், அவசரகால அம்புலன்ஸ் சேவைகளை நாடு முழுவதற்குமாக விஸ்தரிப்பது பூர்த்தியடைகிறது. இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் இப்பொழுது இச்சேவை கிடைக்கப் பெறுகிறது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி. சு. ஜெய்சங்கர் ஒரு விசேட காணொலிச் செய்தி மூலமாக உரையாற்றினார்.

இதையடுத்து இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து தனதுரையில், இச் செயற்றிட்டம் இந்தியாவின், பகிர்ந்து கொள்ளும் உணர்வைக் குறித்துக் காட்டுவதாக தெரிவித்தார்.

'இலங்கைக்கு முதலில் உதவும் நாடாக இந்தியா என்றும் தொடர்ந்திருக்கும் அவசரகால நோயாளர் அம்புன்புலன்ஸ் சேவையின் நாடு முழுவதற்குமான விஸ்தரிப்பு 2018, ஜூலையில் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

2015 மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் இந்தியப் பிரதமரிடம், இலங்கையில் வைத்தியசாலை முன்னனுமதி அவசரகால நோயாளர் அம்புலன்ஸ சேவை ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதற்கமைய, ஒரு US$ 7.5 மில்லியன் இந்திய நன்கொடை உதவியின் கீழ் ஜூலை 2016 இல் தென் மற்றும் மேல் மாகாணங்களில் 1990 அவசரகால நோயாளர் அம்புலன்ஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நன்கொடை 88 நோயாளர் அம்புலன்ஸ்களை கொள்வனவு செய்தல், ஒரு வருடத்திற்கு, சேவைக்கான நடைமுறைச் செலவு மற்றும் அவசரகால உதவி மையம் ஒன்றை ஸ்தாபிக்கும் செலவு என்பவற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

அதேவேளை இலங்கையின் எந்தத் தொலைத் தொடர்பு வலையமைப்பு மூலமாகவும் '1990' எனும் இலக்கத்தை வெறுமனே அமுத்திப் பெறக்கூடிய இந்தக் கட்டணமின்றிய அவசரகால அம்புலன்ஸ் சேவை, இலங்கையில் இந்திய வீடமைப்பு செயற்றிட்டத்திற்கு அடுத்த பாரிய இந்திய நன்கொடை செயற்றிட்டமாக அமைந்தது.

இலங்கையின் சொந்தத் தெரிவுகள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் மக்கள் நலன் சார்ந்த செயற்றிட்டங்களின் பயனுறுதியான அமுல்படுத்துதலின் அடிப்படையிலும் இலங்கையுடனான இருதரப்பு பங்குடமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்தியா பற்றுறுதி கொண்டதாக தொடர்ந்துமுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# ஜேர்மன் தொழில் பயிற்சி நிறுவனத்திற்கு வினைத்திறனான நிர்வாகக் கட்டமைப்பை விரைவாக ஏற்படுத்த முடியுமா?

## நாடாளுமன்றில் டக்ளஸ் கேள்வி



(கொழும்பு)

800 மில்லியன் ரூபாய் செலவில், கிளிநொச்சி, அறிவியல் நகர்ப் பகுதியில் 25 ஏக்கர் நிலப் பரப்பில் இலங்கை அரசாங்கத்துடனான பங்காண்மை அடிப்படையில் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டாண்மை அமைப்பால் நிறுவப்பட்டு, கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் திறந்து வைக்கப்பட்ட இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனம் திறமையற்ற நிர்வாகம் மற்றும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக மூடப்படுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பயிற்சி நிறுவனமானது, நவீன வசதிகளுடன் கூடிய துறைசார் விரிவுரை மண்டபங்கள், வெளி மாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் ஆகியவற்றைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், திட்டமிட்ட தவணைப் பரீட்சைகள்கூட நேரசூசிக்கு அமைவாக நடைபெறுவதில்லை என்றும், நடைபெறுகின்ற பரீட்சைகளின் பெறுபேறுகள்கூட ஆறு மாதங்களின் பின்னரே மாணவர்களுக்கு வழங்கப்படுவதாகவும், இதன் காரணமாக சித்தி பெறாத மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், கடந்த மூன்று வருட காலமாக இயங்கி வருகின்ற மேற்படி பயிற்சி நிலையத்தில் NVQ தரம் 5 ஐ பூர்த்தி செய்துள்ள எந்தத் திணைக்கள மாணவர்களுக்கும் இதுவரையில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்றும், NVQ தரம் 4 ஐ பூர்த்தி செய்துள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களில் இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் கல்வி கற்றதற்கான குறியீடோ, சொல்லோ இல்லை என்றும், இதனால் தாங்களாகவே தொழில் வாய்ப்புகளைத் தேட முயற்சிக்கின்ற மாணவர்களுக்குக்கூட தொழில்வாய்ப்புகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

90 விரிவுரையாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி பயிற்சி நிலையத்தில் தற்போது 40 விரிவுரையாளர்களே பணியாற்றி வருவதாகவும், இத்தகைய பிரச்சினைகள் காரணமாக எஞ்சியிருந்த 50 வீத மாணவர்கள் தாங்களது கற்றல் செயற்பாடுகளைக் கைவிட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிய வருகின்றது.

மேற்படி இலங்கை - ஜேர்மன் தொழில் பயிற்சி நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு தடையேற்படாத வகையில், அதனை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்காக வினைத்திறன் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை விரைவாக ஏற்படுத்த முடியுமா?

மேற்படி பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்கின்ற மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அம்மாணவர்கள் தாமாகவே தொழில் வாய்ப்புகளைத் தேடிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் சான்றிதழ்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க முடியாதா?

மேற்படி பயிற்சி நிலையத்தின் ஆளணிப் பற்றாக்குறையை உடனடியாகப் பூர்த்தி செய்ய முடியுமா?

மேற்படி பயிற்சி நிலையத்தை மூடிவிடக்கூடிய நோக்கங்கள் ஏதும் அரசாங்கத்திற்கு இருக்கின்றதா?

மேற்படி எனது கேள்விகளுக்கான பதில்களையும், எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் அமைச்சர் வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற கேள்வி நேரத்தின் போது கைத்தொழில் அபிவிருத்தி, வாணிப, நீண்டகால இடம்பெயர்ந்தோரை மீள்குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி பதில் அமைச்சர் புத்திக பத்திரனவிடம் இவ்வாறு கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விமான நிலையத்தில் நான்கு பேர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் டுபாயிலிருந்து இலங்கைக்கு சிகரெட் கடத்தி வந்த, குற்றச்சாட்டில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் என சுங்கத்திணைக்களம் தெரிவித்தது.

கைதானவர்கள் தங்களது பயணப் பொதிகளில் மறைத்து, 53 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சிகரட்டுகளை கடத்தி வந்தனர் எனச் சுங்கத் திணைக்களம் தெரிவித்தது. (இ-7)



யாழ்.கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்.மாநகர சபையினால் உலக வங்கி நிதி (SCDP) உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட குருசோ வீதியையும் மத்தியூஸ் வீதியையும் இணைக்கும் வீதியை கடந்த 19 ஆம் திகதி யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் திறந்து வைத்தார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஹ்ரானுடன் எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை

## அமைப்பாளர் முபீன் நிராகரிப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஹ்ரானுடன் எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை என காங்கிரஸின் காத்தான்குடி பிரதான அமைப்பாளர் யு.எல். எம்.என்.முபீன் தெரிவித்தார்.

தற்கொலைக் குண்டுதாரி சஹ்ரானுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்த தாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சியமளித்த முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவித்ததாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மேற்படி எந்த ஒப்பந்தத்தையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஹ்ரானுடன் செய்தது என்பதை முற்றாக நிராகரிப்பதாகவும் அதனை மறுப்பதாகவும் முபீன் தெரிவித்தார். கடந்த 2015 பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக காத்தான்குடி பிரதேசத்தில் பிரதான செயற்பாட்டாளராக நானே செயற்பட்டிருந்தேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பிலான தேர்தல் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகவும் நானே இருந்தேன். அந்தத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை. காங்கிரஸ் சார்பாக இருவர் போட்டியிட்டனர்.

அதிலொருவர் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக மற்றொருவரும் போட்டியிட்டனர். அவர்கள் தனிப்பட்ட ரீதியாக சஹ்ரானுடன் ஒப்பந்தத்துக்கு சென்றிருக்கலாம். அது தொடர்பில் கட்சியின் அமைப்பாளரான எனக்கோ அல்லது கட்சியின் தலைமைக்கோ தெரியாது.

இத்தகைய ஒப்பந்தங்களில் யாராவது ஈடுபட்டிருந்தால் அவர்களே பொறுப்பேற்க வேண்டுமே தவிர கட்சி அதனைப் பொறுப்பேற்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பல்கலையை பொறுப்பேற்பதா? இல்லையா? 'அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்'

## ஆசுமாரசிங்க தெரிவிப்பு



சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கும் பொறுப்பு அமைச்சரவைக்கு உள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

ஆசு மாரசிங்கவின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட கல்வி தொடர்பான மேற்பார்வை தெரிவுக் குழுவானது கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பல்கலைக்கழகத்தை அரசாங்கம் உடனடியாகப் பொறுப்பேற்க வேண்டுமென பரிந்துரைத்தது.

அதற்கமைய, குறித்த தெரிவுக்குழு இந்த வாரம் இது தொடர்பான யோசனையை அமைச்சரவைக்கு முன்வைத்ததாகவும் இந்த விடயம் குறித்து அமைச்சரவை தீர்மானம் எடுக்குமென எதிர்பார்ப்பதாகவும் ஆசு மாரசிங்க தெரிவித்தார். (இ-7)

# ரயில்வே பணிப் பகிஷ்கரிப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை-அர்ஜூன



(கம்பஹா)

அசாதாரண முறையில் மேற்கொள்ளப்படும் ரயில்வே பணி பகிஷ்கரிப்புகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் அர்ஜூன ரணதுங்க எச்சரித்தார்.

கம்பஹா - யக்கல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் அர்ஜூன மேற்கண்டவாறு எச்சரித்தார். (இ-7)

# கொழும்பிற்கு இலகு ரயில் திட்டம்


கொழும்பை அண்டிய பகுதிகளில் இலகு ரயில் சேவை தொடங்குவதற்கான ரயில் பாதை அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கடுவெலையிலிருந்து, கொழும்பு - கோட்டை வரையிலான ரயில் பாதை அமைக்கும் பணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.


அத்துருகிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1759

### அஞ்சனா





### ஹன்றிகா





### அஜந்தா





### தமிழினி




### ஹரிஸ்





### தர்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# கல்விதான் நமக்குச்செல்வம்



மரகதபுரி என்னும் ஒரு நாடு இருந்தது. அந்த நாட்டை கோசலன் என்னும் மன்னன் ஆண்டு கொண்டு இருந்தான். அவன் அதிகமாக கல்வி அறிவு இல்லாதவன். ஆனால் அவன் தந்தை நல்ல கல்வி அறிவு பெற்றவராக இருந்ததால் இவனையும் கல்வி கற்க குருகுல வாசகத்துக்கு அனுப்பினார். என் தந்தைதான் மன்னர், அதற்கடுத்து நான்தான் மன்னராவேன், அப்புறம் எதற்கு படிக்கவேண்டும்? என்று குருவிடம் விதண்டாவாதம் செய்தான். குருவும் எத்தனையோ சொல்லிப்பார்த்தார்.

கல்வி என்பது மற்றவர்களை விட ஆளப்போகும் மன்னனுக்கு முக்கியம் என்று, இவன் கேட்காமல், குருவுக்கு தெரியாமல் அரண்மனைக்கு வந்துவிட்டான். அவன் தந்தையும் எத்தனையோ அறிவுரைகள் சொன்னார். கடைசி வரை இவன் கேட்கவேயில்லை.

இந்த வருத்தத்திலேயே மன்னர் நோய்வாய்ப்பட்டு சிறிது காலத்துக்குள் இறந்து விட்டார். வாரிசுப்படி கோசலன் அடுத்த மன்னனாக முடிசூடப்பட்டான். கல்வி இல்லாமலேயே நான் மன்னனாகிவிட்டேன் என்ற கர்வம் அவனிடம் ஏற்பட்டது. தந்தையிடம் பணிபுரிந்து கொண்டிருந்த அனைத்து சான்றோர்களையும் வீட்டுக்கு அனுப்பி விட்டு அவனைப் போல கல்வியை கற்காமல் இருப்பவர்களையே அமைச்சர்களாகவும் நண்பர்களாகவும் வைத்துக்கொண்டான். படித்தவர்களை இவனது வேலைக்காரர்களாகவும் வீரர்களாகவும் வைத்துக்கொண்டான். இதனால் தினமும் நடைபெறும் அமைச்சரவை வெறும் பாட்டும் கேலியுமாகவே நடந்து கொண்டிருந்தது. இது எதுவும் அறியாத புலவர் ஒருவர் மன்னனை காண அரண்மனை வாசலில், வாயில் காப்பவனாக நின்று கொண்டிருந்த வீரன் ஒருவனிடம் மன்னனைக் காண வந்துள்ளதாகத் தெரிவித்தார். வாயில் காப்பவனாக நின்று கொண்டிருந்தவன் ஓரளவு கற்றவன், அவன் ஐயா நீர் ஒரு புலவர், நன்கு கற்றவர், ஆனால் நீர் பார்க்கப் போகும் மன்னர் அதிகம் கல்வி கற்காதவர், அதுபோல் அமைச்சர் சபையில் உள்ளவர்கள் அனைவரும் கல்வி அறிவு அற்றவர்கள். அதனால் அங்கு உங்களுக்கு ஏதேனும் அவமானம் ஏற்படலாம். ஆதலால் தயவு செய்து இங்கிருந்து சென்று விடுங்கள் என்று சொன்னான். அதைக்கேட்ட புலவர் உன் அறிவுரைக்கு நன்றி. ஆனால் நான் மன்னனைக் கண்டிப்பாக காணவேண்டும் என வற்புறுத்தினார்.

வேறு வழியில்லாமல் வாயிற்காப்போன் புலவரை மன்னனை காண உள்ளே அனுப்பி வைத்தான். உள்ளே நுழைந்த புலவர் மன்னனை கண்டவுடன் மன்னரே வணக்கம் என்றார். புலவரைப்பார்த்த மன்னன் நீங்கள் யார்? எதற்காக என்னைக்காண வந்தீர்கள்? என்று கேள்வி மேல் கேட்டான். ஐயா நான் ஒரு புலவன். தங்களை ஒரு விடயமாக காண வந்துள்ளேன் என்று சொல்லவும் மன்னர் இடி இடி என சிரித்து உம்மைப்போல மேதாவிகளுக்கு என்னிடம் என்ன வேலை? காலத்தை வீணடித்துக்கொண்டு இருக்கும் உம்மைப்போன்ற புலவர்களை உள்ளேயே விடக்கூடாது என வாயில் காப்போனிடம் அறிவுரை சொல்லியும் உம்மை உள்ளே அனுப்பி இருக்கிறான். முதலில் அவனை உள்ளே வரச்சொல்லி பத்து சவுக்கடி வழங்க உத்தரவிடுகிறேன் என்று ஆணையிட்டான்.

புலவர் பதறி மன்னா சற்றுப் பொறுங்கள், அவன் என்னை தடுத்தான். நான்தான் உங்களை அவசரமாக காண வேண்டும் என்று கட்டாயப்படுத்தி உள்ளே வந்துவிட்டேன். பக்கத்து நாட்டு மன்னனை காண நான் சென்றபோது இந்த ஓலையை உங்களிடம் தரச் சொல்லி அனுப்பி வைத்தார். வாங்கிப்பார்த்த மன்னனுக்கு அதில் என்ன எழுதி இருக்கிறது என்பது புரியவில்லை. அருகில் உள்ள அமைச்சரிடம் கொடுத்து படிக்கச்சொல்ல அவரும் அதிகம் படிக்காதவராகையால் எனக்கும் புரியவில்லை மன்னா என்று தலையை சொறிந்தார். புலவரே அதில் என்ன எழுதி இருக்கிறது என்பதை நீரே சொல்லும் என்று புலவரை பார்த்து கேட்க மன்னா என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் இதை கொடுத்த மன்னர் இதில் உள்ளதை நீர் கண்டிப்பாக படித்து சொல்லக்கூடாது. அப்படிச்சொன்னால் அதன் பலன் மன்னனுக்குக் கிடைக்காமல் போய்விடும். இதை மன்னன் தானாகப் புரிந்து கொண்டால் அவனுக்குச் செல்வங்கள் வந்து குவியும் என்று சொன்னார். இல்லை என்றால் அவருக்கு அழிவுதான் என்றும் சொல்லி விட்டார். என்னை மன்னியுங்கள் மன்னா, நான் வருகிறேன் எனது கடமை முடிந்தது என்று சொல்லிவிடைபெற்றுக்கொண்டார்.

ஓலையை வாங்கிய மன்னனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை, அங்கிருந்த அனைவருக்குமே கல்வி அறிவு குறைவாக இருந்ததால் ஓலையில் என்ன எழுதி உள்ளது என்று படிக்க முடியவில்லை. மன்னன் ஒரு வீரனை அழைத்தான். வீரனிடம் இந்த ஓலையை கொடுத்து யாராவது இந்த ஓலையை படித்து மன்னனுக்கு விளக்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கும்படி சொன்னான்.

வீரன் அதன்படி அரண்மனையை விட்டு வெளியேவந்து யாராவது ஓலையை படித்து மன்னனுக்கு விளக்கினால் பரிசுத்தொகை அளிக்கப்படும் என அறிவித்தான்.

மன்னனைப்பற்றி அனைவருக்கும் தெரியுமாதலால் யாரும் அந்த ஓலையைப்படித்து விளக்கம் அளிக்க முன்வரவில்லை. மன்னனுக்கு மிகுந்த அவமானமாயிற்று. ஒரு ஓலையை படிக்க நம் நாட்டில் யாருமில்லையா? முதன் முதலாக கல்வியின் அருமையை உணரத்தொடங்கினான். தன் தந்தையிடம் முன்னர் பணிபுரிந்த அமைச்சரை அழைத்து வரச்சொன்னார். அவரும் மன்னரை காண அரண்மனைக்கு வந்தார்.

ஐயா நீங்களாவது இந்த ஓலையை படித்து எனக்கு விளக்கமளிக்கக்கூடாதா? என்று கேட்டான். அமைச்சரும் அந்த ஓலையை வாங்கிப்பார்த்தார்.

சிறிது நேரம் வாசித்து வாசித்து பார்த்தவர் திடீரென்று அகலமான ஒரு கண்ணாடியை கொண்டு வரச்சொன்னார். மன்னனும் எதுவும் புரியாமல் ஒரு கண்ணாடியை கொண்டு வரச்சொன்னான். கண்ணாடி வந்தவுடன் அமைச்சர் மன்னா இப்பொழுது கண்ணாடியில் உள்ளதை படியுங்கள் என்று ஓலையை கண்ணாடி முன்னால் காட்ட அதில் கல்வி அறிவைப்பற்றிய திருக்குறள்கள் வரிசையாக எழுதப்பட்டிருந்தன.

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்களர்
அனையர் கல்லாதவர்

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்

கல்லாதான் ஒட்பம் கழியனன்று ஆயினும்
கொள்ளார் அறிவு உடையார்.

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்துஇலர் பாடு.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின்

மன்னன் வெட்கத்துடன் அமைச்சரே எனக்குப் படிக்கத் தெரியவில்லை. தயவு செய்து படித்துக் காட்டும் என்று கேட்டான். அமைச்சரும் வாசித்து அவனுக்கு விளக்கம்சொன்னார்.

மன்னன் "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் அமைச்சரே, கல்வி என்பது ஒரு நாட்டின் செல்வம் என்பதை "ஒரு ஓலையை படிக்க இங்குள்ள அனைவருமே சிரமப்பட்ட பொழுதே புரிந்து கொண்டேன்". இனி இந்த நாடு முழுவதும் அனைவரும் கல்வி கற்க ஏற்பாடு செய்வேன். அது போல நானும் உங்களைப் போல உள்ள சான்றோரிடம் கல்விகற்றுக்கொள்ளப்போகிறேன்.

ஒரு நாட்டின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் கல்விதான் அடிப்படை. இந்த கல்வி வளர்ச்சி பெற்றால்தான் ஒரு நாடு அனைத்து வளங்களும் பெற முடியும்.

## விடுகதைகளும் விடைகளும்

• உறங்காமல் தவிப்பவன். ஊருக்குள் வந்தால் பலரை பலி வாங்குவான். அவன் யார்?

சுனாமி

• உயிரில்லாதவன் தினமும் ஓயாமல் ஓடுகிறான். அவன் யார்?

கடிகாரம்

• கடலில் பிறந்தவன். அவன் இல்லாத வீடே இல்லை. அவன் யார்?

உப்பு

• மண்மீது குடையாவான். மழைக்கு துணையாவான். அவன் யார்?

மரம்

## 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



# கோத்தபாயவா? இல்லையா? என்பது எமக்குப் பிரச்சினையில்லை

## அமைச்சர் ஹரிசன் வெளிப்படை

(கொழும்பு)

எதிர்க் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யாராக இருந்தாலும் என்பது எமக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவா? அல்லது வேறு யாரா? என்பது அந்தக் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினை. அது எமது கட்சியில் எந்தவிதப்



பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை.

போகின்ற போக்கில் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவியை கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் வழங்கப்படாதிருக்கும் நிலைமையே அக்கட்சிக்குள் காணப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாய என அறிவிக்கப்பட்டால் ஒதுங்குவீர்களா?

## பசில் ராஜபக்ஷ பதில்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரசாரப் பணிகளை தான் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ, கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் கட்சியின் நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபடுவீர்களா? ஒதுங்குவீர்களா? என பசில் ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவின்



பெயர் அறிவிக்கப்பட்டால், மகிந்த ராஜபக்ஷவுக்காக செயற்பட்டதை விடவும் அதிகமாகச் செயற்பட வேண்டியுள்ளதாகவும் பசில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நான் தயார்!

## அமைச்சர் ராஜித அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தான் தயாராக இருப்பதாக, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர்,

"பிரபலமான பௌத்த பிக்கு ஒருவர், என்னை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டார்.

கட்சி முடிவு செய்து எனக்கு வேட்புமனுவை வழங்கினால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்.

எனக்குப் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்பட்டால், ஜனாதிபதித் தேர்தலில் எப்படி வெற்றி பெறுவது என்று எனக்குத் தெரியும்.

இரண்டு தரப்புக்களில் இருந்தும் என்னால் வாக்குகளைப் பெற முடியும்.

கடற்றொழில் அமைச்சையும் சுகாதார அமைச்சையும் புதுப்பித்ததைப் போலவே, நாட்டையும் புதுப்பிப்பேன்" என்று ராஜித தெரிவித்தார். (இ-7)

# தீர்த்தத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

புலோலி அருள்மிகு வல்லிபாதி முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் இன்று காலை 9 மணியளவில் தீர்த்தத்திருவிழா நடைபெறும். (இ-78)



இக்கணத்தில் வாழப் பழக வேண்டும்.
—யாரோ

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## சிறுவர் வைத்தியசாலையை கைநழுவ விட்டுவிடாதீர்கள்

வடக்கு மாகாணத்துக்கான சிறுவர் வைத்தியசாலையை இணுவில் மக்லியொட் வைத்தியசாலை வளாகத்தின் ஒரு பகுதியில் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தமை ஏலவே தெரிந்ததே.

சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கான காணி தெரிவு செய்யப்பட்டு, அதற்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு மதில் சுவர்கள் அமைக்கப்பட்ட நிலையில், குறித்த காணியின் உரிமம் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளது.

இதனால் சிறுவர் வைத்தியசாலையை நிர்மாணிக்கின்ற பூர்வாங்க நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

வட பகுதி மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சிறுவர் வைத்தியசாலையை கைநழுவவிடுவதென்பது எமது இனத்துக்கு நாம் செய்கின்ற மிகப்பெரிய பாதகமாகும்.

அதேநேரம் இணுவில் மக்லியொட் வைத்தியசாலை வளாகத்தில் வடபகுதிக்கான சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதென்பது மிகவும் பொருத்தமான தெரிவாகும்.

நீர்வளம், நிலவளம், போக்குவரத்து வசதிகள் என்ற அடிப்படைக் கட்டுமானங்கள் அங்கு திருப்தியாக இருக்கிறது.

இதுதவிர, ஒரு காலத்தில் இணுவில் மக்லியொட் வைத்தியசாலை என்பது பிரசவத்துக்கான மிகச்சிறந்த வைத்தியசாலையாகவும் இருந்ததன் அடிப்படையில், அந்த இடத்தில் சிறுவர் வைத்தியசாலை அமைவது பொருத்துடையது.

எனவே, குறித்த காணி உரிமம் தொடர்பில், எழுந்துள்ள சர்ச்சையை நிவர்த்திக்க விசேட குழுவொன்றை அமைத்து அதனூடு சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இதுவிடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலையிடுவது பொருத்துடையதாகும்.

மேற்படி விடயத்தில் ஆளுநர் தலையிடுவதுடன் சிறுவர் வைத்தியசாலையுடன் தொடர்புபட்ட வைத்திய நிபுணர்கள், யாழ். போதனா வைத்தியசாலை தலைமை நிர்வாகம் மற்றும் சமூகக் கருசனையுடன் செயற்படக்கூடிய; யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சிவபூமி இயக்குநர் கலாநிதி ஆறு திருமுருகன், முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் போன்றவர்களையும் வெளிநாடுகளில் உள்ள எங்கள் புலம்பெயர் உறவுகள் இயக்குகின்ற நிதிவளம் மிகுந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக ஒரு குழுவை அமைத்து அதன்மூலமாக சிறுவர் வைத்தியசாலைக்கான அமைவிட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இவ்விடத்தில் காணி உரிமம் தொடர்பில் யாரெல்லாம் உரிமை கோருகிறார்களோ அவர்கள் அத்தனை பேரும் ஒரு நல்ல கைங்கரியம் அமைவதற்குத் தங்களால் ஆன உதவிகளையும் பரோபகாரங்களையும் வழங்கி வடபகுதிக்கான சிறுவர் வைத்தியசாலை அமையப் பெரும் பங்காற்ற வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

## ‘எந்தக் குழந்தையும் பிறக்கவில்லை’

# இந்த அரசைக் கண்டால் சோபித தேரர் மீண்டும் மரணித்து விடுவார்- ரோஹித நக்கல்

கடந்த தேர்தலின் போது விருப்பமில்லாத இருவருக்கு செய்து வைத்த பலவந்த திருமணமே இந்த அரசாங்கம் எனவும், கடந்த நான்கரை வருடங்கள் ஆகியும் இதனாலேயே எந்தக் குழந்தையும் பிறக்கவில்லையெனவும் கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

தாய்க்கும், தந்தைக்கும் இருந்த தேவையின் காரணமாக இந்தத் திருமணத்தை செய்து வைத்தனர். மைத்திரிபால சிறிசேனவை ஒரு பக்கத்தாலும், ரணில் விக்கிரமசிங்கவை இன்னுமொரு பக்கத்தாலும் அழைத்து வந்தனர். சிம்மாசனத்தை அமைத்தனர். அவர்களை ஏற்றினர். திருமணத்தைச் செய்து வைத்தனர். கடந்த நான்கரை வருடங்கள் ஆகியும் இதுவரை எந்தவொரு குழந்தையும் இல்லை.

சோபித தேரர் எழுந்து வந்தால் இவர்களைக் கண்டால் மீண்டும் மரணித்து விடுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 15 நாட்களில் விடுதலை!

# இலங்கைத் தமிழர்கள் நால்வரின் உண்ணாவிரதப் போராட்டம் நிறுத்தம்

திருச்சி மத்திய சிறை வளாகம் சிறப்பு முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்கள், 4 பேர் உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

தங்களை பொய் வழக்கில் கைது செய்து வழக்கை முடித்து விடுதலை செய்ய வேண்டும் அல்லது கருணைக் கொலை செய்துவிட வேண்டும் எனக்கூறி இலங்கைத் தமிழர்கள் பாஸ்கரன், ரமேஷ் ,அருளின்பதேவன், செல்வம் ஆகியோர உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் திருச்சி சிறப்பு முகாமில் கடந்த, 8 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த , 4 இலங்கை தமிழர்களின் உண்ணா விரதப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது.

அவர்களது கோரிக்கையை ஏற்று 15 நாட்களில் அவர்களை விடுதலை செய்வதாக அரசு தரப்பில் உத்தரவாதம் அளித்ததையடுத்து அவர்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பொலிஸ்மா அதிபரின் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானம்!

கட்டாய விடுமுறை குறித்து பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. இதற்கமைய குறித்த மனு எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளதாக உயர் நீதிமன்றம் நேற்று தெரிவித்தது. (இ-7)

## 15 இராணுவத்தை கொலை செய்த குற்றச்சாட்டில்

# மூன்று தமிழ் அரசியல் கைதிகள் வவு.மேல் நீதிமன்றில் முன்னிலை

விடுதலைப்புலிகளினால் சிறைபிடிக்கப்பட்டு அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த 15 இராணுவத்தினரை கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் மூவர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அந்தவகையில் நேற்று (திங்கட்கிழமை) மூன்று அரசியல் கைதிகளும் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இதன்போது கருத்து தெரிவித்த குறித்த அரசியல் கைதிகள், “தங்கள் மீதான வழக்கு பொய்யான வழக்கு எனவும் நீதிமன்றத்தில் தமக்கு நம்பிக்கை உள்ளதால் நல்ல தீர்ப்பு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும்” தெரிவித்தனர்.

வவுனியாவில் இராணுவத்தினரை கொலை செய்த குற்றச்சாட்டில் மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகியோர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர்.

இதனை அடுத்து அந்த குற்றச்சாட்டு தொடர்பாக 2014ம் ஆண்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு விசாரணையின் பின்னர தடுத்து வைக்கப்பட்டனா். நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களது வழக்கு தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டதுடன், 2017ம் ஆண்டு திருத்தப்பட்ட குற்றப்பத்திரத்தின் மூலம் இராசதுரை திருவருள் என்ற முன்னாள் போராளியும் குறித்த வழக்குடன் இணைக்கப்பட்டார்.

இவர்கள் மீதான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் குறித்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தமது வழக்குகளை மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு கோரி இவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-250)

## புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வராத்துப்பளை பருத்தித்துறை வளர்மதி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

அந்தவகையில் புதிய நிர்வாகசபைத் தலைவராக தி.விமலராசாவும் செயலாளராக பெ.பத்மநாதனும் பொருளாளராக தி.நெவில்லனும் உப தலைவராக வ.கீர்த்திகனும் உப செயலாளராக அ.சுதாகரனும் தெரிவு செய்யப்பட்டதோடு நிர்வாக உறுப்பினர்களாக ஞா.திருச்செல்வம், மா.கிரிதரன், ப.பிரசாந்,திருமதி கு.ஞானமதா, திருமதி இ.இராஜேஸ்வரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(ம-3)

## வேள்வி உற்சவம்

(யாழ்ப்பாணம்)


வராத்துப்பளை பருத்தித்துறை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த வேள்வி உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விளக்கு வைக்கப்பட்டு அடுத்த மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை மடை,பொங்கல்,விசேட பூசைகளுடன் இடம்பெறவுள்ளது.(ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- இயற்கையை வெல்வதற்கே மனிதன் பிறந்திருக்கிறான். அதற்கு பணிந்து போவதற்கு அல்ல.
- கோயிலில் இருக்கும் விக்ரகத்தை கடவுள் என்று சொல்லலாம். விக்ரகம் மட்டுமே கடவுள் என்று நினைப்பது கூடாது.
- உயர்ஞானம் பெற வேண்டுமானால் மனிதன் அறிவு, அறியாமை இரண்டையும் கடந்து செல்ல வேண்டும்.
- பாராட்டிற்கும், பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான செயல் எதையும் சாதிக்க முடியாது.
- மனிதனுக்கு போராட்டம் மனதில் எப்போதும் நடக்கிறது. அதை அடக்கும் அளவிற்கு வாழ்வு உயரும்.

# விஜயரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்; சென்றலைட்ஸ் அணி இறுதிக்கு தெரிவு



விஜயரட்ணம் வெற்றிக்கிண்ணத்திற்கான ஞானம்ஸ் பெயின்ட் நிறுவனத்தார் புற்தரையில் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட (20) இருபது ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் தகுதிச் சுற்று 2 போட்டியில் சென்றலைட்ஸ் அணி பற்றீசியன்ஸ் அணியை 21 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. முதலில் துடுப்பொடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைப்பெற்றனர். வியஸ்காந்-39, பிரியலக்ஸன்-24, நிரோஜன்-19, டார்வின் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

றோபேட்-02 இலக்குகளை கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 19 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றனர்.

கவஸ்கர்-47, ரியூடர்-22, நிதர்ஸன்-14, மொனிக்-15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டார்வின்-04, ஜெரின்-02, சாள்ஸ்-02, வியஸ்காந்-02 இலக்குகளைப் கைப்பற்றினர். இப்போட்டியின் சிறந்த வீரராக வியஸ்காந் தெரிவு செய்யப்பட்டார். (கு)

# விலகல் சுற்றிற்கு பற்றீசியன் தெரிவு



விஜயரட்ணம் வெற்றிக் கிண்ணத்திற்காக ஞானம்ஸ் பெயின்ட நிறுவனத்தினர் புற்தரையில் நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் விலகல் சுற்றில் (ELEMINATOR) பற்றீசியன்ஸ் அணி கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 34 ஓட்டங்களால் வெற்றி பெற்று தகுதிச் சுற்று 2 இற்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 19.5 ஓவர்களில் சுகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றனர். மொனிக் - 40, அஜித்-30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜனன்தன்-03, சுஜீவன்-03, மதூஸன், டினேஷ் தலா 01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 17.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றனர். அஜித்-30, ஜனன்தன்-24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நோபேட்-03, கவஸ்கர்-02, அஜித்-02 இலக்குளைக் கைப்பற்றினர். இப்போட்டியின் சிறந்த வீரராக பற்றீசியன்ஸ் அணியைச் சேர்ந்த நோபேட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பாடசாலைகளுக்கிடையிலான கபடிப்போட்டி; சிவநகர் அ.த.க.பாடசாலை அணி சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 27:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

# கிளி.சிவநகர் அரசினர் த.க.பாடசாலையை வீழ்த்தி சம்பியனாகியது கோணாவில் மகா வித்தியாலயம்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற இறுதியாட்டத்தின் ஆட்ட நேர முடிவில் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணி 36:34 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)



சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினால் போதைப் பொருள் தடுப்பு மாதத்தை முன்னிட்டு அண்மையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற ஈவினை கலைமகள் விளையாட்டுக்கழக அணிக்கு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.செல்வகுமார் வெற்றிக்கேடயம் வழங்கிவைத்தார்.
(படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## 18ஆவது திருத்தம் சர்வாதி...

அவர் கூறினார்.

கொழும்பில்நேற்றுதிங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், 19 ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்த போது, ஒட்டுமொத்த நாடும் அதற்கு ஆதரவாகவே இருந்தது. எனினும், நாம் எதிர்ப்பினையே அன்று வெளியிட்டிருந்தோம்.

இதுதொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என உயர்நீதிமன்றின் தீர்ப்பையும் நாம் அன்று பெற்றுக்கொண்டோம். இப்போது நான்கரை வருடங்கள் கடந்து விட்டன.

இத்தனை வருடங்களாக, 19 ஆவது திருத்தச்சட்டத்தில் வாழ்ந்து வந்து, தற்போது ஜனாதிபதியும் எமது நிலைப்பாட்டுக்கு வந்துள்ளமையை இட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால், 18 ஆவது திருத்தச்சட்டம் சர்வாதிகாரச் சட்டம் என ஜனாதிபதி கூறியதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசமைப்புக்கு இணங்க, ஒருவரால் இரண்டு தவணைகள் மாத்திரமே ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 19ஆம் திருத்தத்தை நீக்க...

மூலமே கிடைக்கப்பெற்றிருக்கின்றன என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரி விக்கையில்,

அரசியலமைப்பின் 18 மற்றும் 19ஆம் திருத்தங்கள் மாற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்போது மக்களுக்கு தெரிவித்த வாக்குறுதிகளில் ஒன்று தான், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்கி பாராளுமன்றத்துக்கு அதிகாரங்கள் வழங்கவதாகும்.

அதன் பிரகாரம் அரசியலமைப்பின் 19ஆம் திருத்தத்தில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மேற்கொள்ளக்கூடிய திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கி இருக்கின்றோம். ஜனாதிபதிக்கு இருக்கும் ஏனைய அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு பெற்றுக்கொடுப்பதாக இருந்தால் அதற்கு மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

அத்துடன் தற்போதைய பிரதமருக்கு அதிகாரம் கிடைப்பதற்கு நாங்கள் விருப்பம் இல்லாவிட்டாலும் ஜனாதிபதி முறைமையை விட அதிகாரம்கொண்ட பாராளுமன்ற முறைமையை மேற்கொள்ளப்படவேண்டும் என்பது எமது கொள்கையாகும்.

அதனால் 19ஆம் திருத்தத்தை இல்லாமலாக்கவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருப்பதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என அவர் இதன் போது தெரிவித்தார். (ம-3)

## முல்லையில் 6 மாதத்திற்குள்...

நிதி சுரேன் ராகவன் உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இணைத் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோரின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலகம், மாகாண காணி திணைக்களத்தில் இதை நடைமுறைப்படுத்த போதிய ஆளணி இல்லையென கூறப்பட்டது. இருப்பினும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்களை இணைத்து காணி உறுதி வழங்குமாறு ஆளுநர் உத்தரவிட்டார்.

இதேவேளை மகாவலி, தொல்லியல் மற்றும் வனத் திணைக்களத்தின் காணி சர்ச்சைகள் குறித்து ஆராய சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்ய முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தோடு முல்லைத்தீவு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது. இந்த விடயம் தொடர்பாகவும் மீன்பிடி அமைச்சின் அதிகாரிகள், ஆளுநர், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளை உள்ளடக்கிய உயர்மட்ட கூட்டமொன்றை விரைவில் கூட்டி ஆராய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாணத்தில் நில அளவையாளர், வரி மதிப்பீட்டாளர் உள்ளிட்ட பல வெற்றிடங்கள் இருப்பதும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு ஓய்வுபெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் செயற்பட விண்ணப்பிக்குமாறு இரண்டு தடவை ஊடகங்கள் வாயிலாக தான் அறிவித்தும் எவரும் முன்வரவில்லை என ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஆளணி பற்றாக்குறை பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இந்த பிரச்சினையை தீர்க்க ஓய்வுபெற்ற வைத்தியர்களை இணைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## விசாரணைகளை...

ஆகியோரை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

பாதுகாப்பு செயலாளர்ஹேமசிறி பெர்னாண்டோ தனது பதவியை ஏப்ரல் 25 ஆம் திகதி இராஜினாமா செய்த நிலையில், ஏப்ரல் 29 ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நூறு நாட்களுக்...

எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும பொதுஜன பெரமுன தனது ஜனாதிபதி வேட்பாளரை ஒகஸ்ட் 11 ஆம் திகதி இடம்பெறும் மாநாட்டில் அறிவிக்கும் என கூறினார்.

இதன் பின்னர் கட்சி 100 நாள் பிரசாரத்தை தொடங்கும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு வெற்றிபெற்றதை அடுத்து தற்போதைய அரசாங்கம் 100 நாள் பிரசாரத்தை ஆரம்பித்தது எனவே நாங்கள் எடுக்கும் இந்த பிரசாரத்தின் மூலம் 100 நாட்களுக்குள், ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் செயற்பாட்டினை முடிவுக்கு கொண்டு வருவோம் என்று அவர் தெரிவித்தார். (ம-3)

## 19ஆம் திருத்தத்...

அரசியலமைப்பினை மாற்றியமைப்பதற்கு போதுமான காலம் தற்போது கிடையாது. ஒருவேளை இரத்து செய்ய வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற வேண்டும்.

தற்போதைய நிலையில் பாராளுமன்றத்தில் எத்தரப்பினரிடமும் மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஆதரவுகிடையாது. ஆகவே அரசியலமைப்பினை இரத்து செய்ய வேண்டும் என்பது சாத்தியமற்றது. நிலையான ஒரு அரசாங்கத்திலே அரசியலமைப்பில் காணப்படுகின்ற குறைப்பாடுகளும், முரண்பாடான ஏற்பாடுகளும் பாராளுமன்ற பொருள் கோடலுக்கு அமைய திருத்தியமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குரன்கெல மெதவெல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## தமிழ், சிங்கள...

டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், முஸ்லிம் மக்களும் இலங்கையர் என்ற நிலையில் இருந்து செயற்பட வேண்டும் என்பதே பிரதான எதிர்பார்ப்பு. ஆனால் நடைமுறையில் இவர்கள் அந்நிய நாட்டு கலாசாரங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டில் இன்று இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒரு புறமும், வல்லரசு நாடுகளின் ஆக்கிரமிப்புக்கள் ஒப்பந்த ரீதியில் இடம் பெறுவது மறுபுறமும் இடம்பெறுகின்றன. இவ்விரு செயற்பாடுகளுக்கும் பிரதமர் ரணில்விக்ரமசிங்கவின் தான்தோன்றித்தனமாக பொருளாதார கொள்கைகளும், பொருத்தமற்ற அரசியல் கொள்கைகளும் மூல காரணியாக அமைந்துள்ளதாகவும்அவர் குறிப்பிட்டார். (ம-3)

## இன்று ஆச்சரியம்...

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் இலங்கை குறித்து சர்வதேச நாடுகளின் நம்பிக்கை வலுவிழந் துள்ளதாகத் பிரதமர் தெரிவித்துள்ளார்.

முத்துராஜவெல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் பேசிய அவர்,

நாடு கடுமையான கடன் சுமையில் சிக்கியிருந்த நிலையிலேயே நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை தமது தரப்பு ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் இலங்கை தொடர்பில் உலக நாடுகள் கொண்டுள்ள அபிப்பிராயம் தொடர்பில் புரிந்து கொள்ள முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## சுதந்திரமாக மக்கள் இருந்தனர்...

பலவீனமான நிலைமையால் அச்சத்துடன்தான் வாழ்ந்து வரு கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, இவ்வாறான அரசாங்கம் விரைவில் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். கெட்டம்ப பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று நாட்டில் இருக்கும் நிலைமை தொடர்பில் அனைவருக்கும் தெரியும். பொருளாதாரம், அபிவிருத்தி என அனைத்திலும் நாம் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறோம்.

நாம் கடந்த காலங்களில் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தோம். அன்று குண்டுகள் வெடித்தபோது கூட மக்கள் அச்சப்படவில்லை. பலமான அரசாங்கமொன்று இருந்தமையால் யுத்தத்தை வென்று விடலாம் என்று எம்மீது பூரண நம்பிக்கையில் தான் மக்கள் இருந்தார்கள்.

கெப்பிடிகொல்லாவையில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டபோது, நான் உள்ளிட்ட அரச தலைவர்கள், முப்படையின் பிரதானிகள் என அனைவரும் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்திருந்தோம்.

அங்குள்ள மக்களுடன் உரையாடி, அவர்களின் அச்சத்தை போக்கினோம். இதனைத்தான் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் செய்ய வேண்டும். யுத்தமொன்று இடம்பெற்றது என நாம் மக்கள் மீது சுமைகளை சுமத்தவில்லை.

ஆனால், இன்றைய நிலைமை அவ்வாறு இல்லை. பலவீனமான அரசாங்கமொன்றே நாட்டை ஆட்சி செய்து வருகிறது. ஜனாதிபதியும் பிரதமரும் இருவேறு திசைகளை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் மக்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உண்மையான எண்ணிக்கையைக் கூட கூறிக் கொள்ள முடியாத நிலையில்தான் அரசாங்கம் இருக்கிறது. மாணவர்களுக்கு பாடசாலைக்குச் செல்லக் கூட அச்சமான ஒரு நிலைமை தான் தொடர்ந்தும் நிலவி வருகிறது.

இந்த நிலைமை முற்றாக மாற்றியமைக்க வேண்டும். தேர்தலைத் தவிர்த்து இதனை போக்க வேறு வழிகளே இல்லை என்பது தான் எமது நிலைப்பாடாகும். சரத் பொன்சேகா கூட, தீவிரவாத அச்சுறுத்தல் இன்னும் முற்றாக ஒழியவில்லை என்றுக் கூறியுள்ளார்.

இப்படியே நாட்டை கொண்டு செல்ல முடியாது. இதனால்தான் தேர்தல் ஒன்று தேவை என்று நாம் கூறிவருகிறோம். பாதுகாப்புக் கொள்கை பலப்படுத்தப்பட்டால் மாத்திரமே ஒரு நாட்டினால் ஸ்திரமான பயணத்தை மேற்கொள்ள முடியும் என கூறினார். (ம-3)

## இலங்கையில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது...

ஐக்கிய நாடுகள் சபையின் 41 வது அமர்வு நேற்று திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமானது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாக தனது கவலையை வெளியிட்டார்.

முக்கியமாக, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒற்றுமையான அனுகுமுறை இல்லாதது நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என கூறினார்.

முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சில மதத் தலைவர்களின் வன்முறையைத் தூண்டும் விதமான சமீபத்திய அறிக்கைகள் கவலையை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத தடுப்பு சட்டம் அமுலில் இருக்கும் நிலையில் அவசரகால சட்டத்தை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்தோடு அரசியல் தலைவர்கள், மத மற்றும் சமூக தலைவர்கள் அனைவரும் இணைந்து வன்முறைகள் மற்றும் இனரீதியாக இருக்கும் பாகுபாடுகளை களைவதற்கான வழிமுறைகளை காண்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்படுகளை பாராட்டியுள்ள அவர், தொடர்ந்தும் தன்னுடைய ஆதரவு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)

### சுபிரி வாசனா

திகதி 2019/06/24
சீட்டிழுப்பு இலக்கம் 1437

20 10 31 60 63 43 09

### மெகா பவர்

திகதி 24/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 397

K 13 02 24 54 58

### மஹஜன சம்பத

திகதி 2019/06/24
சீட்டிழுப்பு இலக்கம் 3945

U 5 6 2 6 2 5

### கொவிசெத

திகதி 2019.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 2158

G 01 24 57 71

தேசிய லொத்தர் சபை

துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528 (9192)


# பாராளுமன்ற தெரிவுக்குழுவில்...

ரிஷாத் பதியுதீன் முன்னிலையாகி சாட்சியமளிக்கவுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட ஒரு சிலர் கைது செய்யப்பட்ட நிலையில் இராணுவ தளபதிக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து அழுத்தம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு உள்ளிட்ட விசாரணைகளை குழப்புகின்றார் என எதிர்த் தரப்பு குற்றம் சுமத்தி வந்த நிலையிலும் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட நபர்களில் ஒருவருடன் வியாபார தொடர்புகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவரையும் தெரிவுக்குழு முன்னிலையில் அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு கூடவுள்ளது. இதன்போது முதல் சாட்சியமாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வரவுள்ளார். அதே போல் மேலும் இரு அரச அதிகாரிகளும் வரவழைக்கப்படவுள்ளதாக தெரிவுக்குழு தெரிவித்துள்ளது. கடந்த மே மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு கூடி தாக்குதலுடன் தொடர்புபட்ட விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இதுவரை பாதுகாப்பு அதிகாரிகள், புலனாய்வு துறை அதிகாரிகள் முன்னாள் மற்றும் தற்போதைய பாதுகாப்பு செயலாளர், அகில இலங்கை ஜமியத்துல் உலமா உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புகள் சிலவற்றின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பத்திற்கும் அதிகமானவர்களின் வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டுள்ளது.

அடுத்துவரும் விசாரணைகளில் அரசியல் தரப்பினர் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் மீண்டும் இஸ்லாமிய மத அமைப்புகளை வரவழைக்க தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்குழு கூறுகின்றது.

எனினும் இந்த தெரிவுக்குழு முன்னிலையில் தம்மை அழைத்து விசாரணை நடத்த வேண்டும் என பொதுபல சேனா உள்ளிட்ட சில அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# விசாரணைகளை...

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவிற்கு எதிராக குற்றவியல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபருக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கைக்கு அமையவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் போது தனது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாமை குறித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர், பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர

23


உடனடி வேலைவாய்ப்பு

நிரந்தர வேலை ஒன்றை தேடும் நபரா நீங்கள்? உங்களுக்கான ஒரு அரிய வாய்ப்பு. எமது EBM நிறுவனத்தின் கிளைகளில் பணிபுரிவதற்கான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. உங்கள் தகுதி மற்றும் திறமைகளுக்கான பதவிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| அலுவலக உத்தியோகத்தர் | - | (12,000/=) |
| மேற்பார்வையாளர் | - | (18,000/=) |
| வரவேற்பாளர் | - | (12,000/=) |
| உதவிமுகாமையாளர் | - | (28,000/=) |
| கிளை முகாமையாளர் | - | (42,000/=) |
| களஞ்சிய பொறுப்பாளர் | - | (15,000/=) |

(6371)

போன்ற பதவிகள் உள்ளன. ஒவ்வொரு பதவிகளுக்கும் பயிற்சியளிக்கப்படும். பயிற்சியின் பின்னர் வெளிநாடு செல்லும் வாய்ப்பும் உண்டு.

தொடர்புகளுக்கு : 077 174 3524, 076 939 3965



Techno World
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

A/L 2020, மாணவர்களுக்கான தனிப்பட்ட அனுமதிகள் வழங்கப்படுகிறது.

29.06.2019 சனிக்கிழமை காலை 8.30
077 017 5346, 077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்



இந்திய கோடீஸ்வரர் அம்பானியின் றிலையன்ஸ் குழும தொழிற்சாலையில்
மலேசிய வேலைவாய்ப்பு

| | | |
|---|---|---|
| எலெக்ட்ரீஷியன் Industrial Electrician | 100 | 1130 - 2200RM ரூ.47,460 |
| இயந்திர தொழில்நுட்பவியலாளர் Mechanical/Instrumental Technician | 100 | முதல் ரூ.92,400 வரை |

ஜூலை மாதம் பயண ஏற்பாடு
0777 324 004, 077 00 38 215, 021 221 9 221 (C-6776)
எமரல்ட் ஐல் 221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
License No. 2268
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



SAAMSON இன் மூன்றுமாத வார, வார இறுதி இலவச ஆங்கிலப்பயிற்சிநெறி

13 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்ட ஆங்கிலம் கற்க ஆர்வமுள்ள எவரும் இம் மூன்றுமாத இலவச ஆங்கிலப்பயிற்சியில் இணையமுடியும்

சனி/ஞாயிறு பிரிவுகள் 29.06.2019 | செவ்/வியாழன் பிரிவுகள் 27.06.2019

1.காலை 10.00 / 2.மதியம் 12.00 / 3.பி.ப 02.00 — உடனடியாக முன்பதிவு செய்யுங்கள் — 1.காலை 08.30 / 2.காலை 10.30 / 3.மதியம் 12.30 (C-6778)

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் இப்பயிற்சியில் இணைமுடியும்

403, வெலிங்டன் சந்தி, சன்மார்க்க மகா வித்தியாலயம் முன்பாக யாழ்நகர். 077 621 4567 021 222 4282



CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT
July 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம் (C-6773)



G.C.E O/L உடன்
TUITION FEE 30,000/- ONLY
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0771041923 | 0213146171



உயர்கல்விக்காக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கான இலவச ஆலோசனையும் கலந்துரையாடலும்

CTHI (C-6772)
IELTS தேவையில்லை
O/Lவரை படித்திருந்தாலே போதுமானது
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0771041923 | 0213146171



சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை (C-5615)
அருள் இல.1. NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576



விசேட வகுப்புக்கள்
செவ், புதன், வியாழன், ஆரம்பம் : இன்று (25/6)
முகாமைத்துவ உதவியாளர்
செவ், வியாழன், பி.ப 4.00 மணி
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு



31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 . 07 . 1945



மறைவு 28 . 05 . 2019

அமரர்
யோகுதாசன்
ஞானம்பிகை மீனாட்சி (அம்பிகா)

கடந்த 28.05.2019 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் திருமதி யோகுதாசன் ஞானாம்பிகை மீனாட்சி (அம்பிகா) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை (27.06.2019) காலை 6.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் தெரிவித்தோர், சகல வழிகளிலும் உதவி புரிந்தோர், இறுதிச் சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு: தயவு கூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திரகாளிகோவில் ஒழுங்கை, பருத்தித்துறை. (6773)
தகவல் : குடும்பத்தினர் 021 226 5607



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ற பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத் தைதந்து வாங்கப்படும். (C-6569)
தொடர்பு: ராஜ் - 077 679 6623



பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுத் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
0768226243
v2vacancies@gmail.com



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS (C-6582)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.